
495

# ஐவர் அருஞ் செயல்

495
44686



W x
N46
104934

...BLISHING HOUSE
...DRAS.

As. 14

# ஐவர்
# அருஞ் செயல்

15 MAR 19

P. வீரராகவன்
(ஆசிரியர், "ஆரம்பக்கல்வி", சென்னை.)

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்
94-95, புதுத்தெரு, மண்ணடி,
மதராஸ்

காப்பி ரைட்] 1946 [விலை அணா 14.

44686

முதற் பதிப்பு 1946

N46

104934

THE RAJAN ELECTRIC PRESS, MADRAS.
Q. H. M. S. 74 2/46.

15 MAR 1956

# முன்னுரை

தனிமகனுடைய வாழ்க்கை சிற்சில இயைபுகளாலும், தொடர்புகளாலும், உருப்பெற்றுக், குடும்ப வாழ்க்கையாய் அரும்புகின்றது. குடும்பவாழ்க்கை பலவகைப்பட்ட நேர்புகளாலும், வாய்ப்புகளாலும், கட்டுப்பாடுகளாலும் பெருமையடைந்து, நாட்டு வாழ்க்கையாய் மலர்கின்றது. இந் நாட்டு வாழ்க்கை பல வகைப்படும். நாடுகளின் இயற்கை அமைப்புக்கும், அவை தோன்றி வளர்ந்தவகைகளுக்கும் ஏற்ப, பற்பல நாட்டவரின் வாழ்க்கை உருவெய்தும். கூர்ந்து நோக்குவார்க்கு ஒவ்வொரு நாட்டவரின் வாழ்க்கையும் ஒவ்வொரு குறிக்கோளை அடிப்படையாய்க் கொண்டிருத்தல் புலப்படும்.

சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் முளைத்த ஆங்கில வாழ்க்கை ஆங்கில நாட்டின் சிறுமையால் விளக்க மற்றிருந்தது.

> **நாடென்ப நாடா வளத்தன : நாடல்ல**
> **நாடவளம் தரும் நாடு.**

என்ற குறளின்படி ஒரு நாடு தன் செவ்விய வாழ்க்கைக்குப் பிறநாடுகளின் வளங்களை எதிர்பாராமல் இருத்தல் வேண்டும் என்பது

புலனுகின்றது. **வள்ளுவர்** வகுத்த தக்க இலக்கணத்திற்கு இலக்கியம் ஆகாத நிலையில் ஆங்கில நாடு அக்காலத்தில் இருந்தது. எனவே, ஆங்கில மக்களின் முயற்சி வளம் குறைந்த தங்கள் சிறு நாட்டை வளங்கள் பல நிறைந்த பெருநாடாக்க முனைந்தது. அம்முனைப்பின் முற்படையில் விளங்கிய **ஐவர் அருஞ் செயல்** இந்நூல். **ஐவர் அருஞ் செயல்** கற்கும் மாணவர்கள் தாமும் அருஞ்செயல் செய்ய எண்ணுவர் என்பது திண்ணம்.

**ஆசிரியர்.**

# பொருளடக்கம்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | ரால்ப் பிட்ச் (Ralph Fitch) | .... | 1 |
| 2. | ஸர் தாமஸ் ரோ (Sir Thomas Roe) | .... | 28 |
| 3. | ராபெர்ட் க்ளைவ் (Robert Clive) | .... | 50 |
| 4. | மங்கோ பார்க் (Mungo Park) | .... | 75 |
| 5. | ஸர் ஸ்டாம்பர்ட் ராபில்ஸ் (Sir Stamford Raffles) | | 96 |

# ஐவர் அருஞ் செயல்

## [1]ரால்ப் பிட்ச்

**திரைகடல் ஓடியும் திரவியம் தேடு** என்பது தமிழ் அன்னையான அவ்வையின் கட்டளை. அது சென்ற சில நூற்றாண்டுகளாக ஏட்டளவில் கிடக்கின்றதே தவிர, செயலளவில், சிறந்த முறையில், தமிழ் மக்களால் நிறைவேற்றப்படவில்லை. அவ்வையின் காலத்தில் வாழ்ந்திருந்த தமிழ் மக்கள் அமைதியில் விருப்பும் துணிந்து செயல் ஆற்றுவதில் வெறுப்பும் கொண்டவர்களாய் இருந்தனர் போலும். அவர்களுக்கு ஊக்கம் ஊட்டித் தமிழ் நாட்டைச் செல்வத்தில் சிறந்த நாடாக்க அவ்வை

1. Ralph Fitch.

விரும்பினர். **போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து** என்று எண்ணி, எளிதில் மகிழ்ச்சி அடையும் இயல்புடைய தமிழ் மக்கள் அவ்வையின் கட்டளையை அறவே மறந்தனர்.

ஆனல் உலகத்தின் வரலாற்றில், நேற்று எனச் சுட்டியுரைக்கத் தக்க நெருங்கிய காலத்தில், தலையெடுத்த ஆங்கில மக்கள், திரைகடல் ஓடித் திரவியம் தேடியதோடு நில்லாமல், கடல் கடந்து கால் வைத்த இடத்தில் எல்லாம் கொடியை நாட்டித் தங்கள் ஆட்சியின் எல்லையைப் பரப்பினர்.

[1]**எலிஸபத்** இறைவி 1558-ஆம் ஆண்டில் முடி சூடிய காலத்தில், அவர் ஆட்சிக்கு உட்பட்டவை [2]**இங்கிலாந்து,** [3]**அயர்லாந்து** என்ற இரண்டு நாடுகளே. அக்காலத்தில் ஐரோப்பாவில் தலை சிறந்து விளங்கிய [4]**ஸ்பெயின்** இங்கிலாந்தை அடிமைப் படுத்த மிகவும் முயன்றது. ஸ்பெயின்நாட்டின் முன்னேற்றத்தையும் ஆற்றலையும் கண்ட ஆங்கில மக்களின் வீரவுணர்ச்சி சுடர் விட்டு எரியத் தொடங்கிற்று. அவர்கள் உள்ளத்தில் நாட்டுப் பற்றும் விடு-

1. Elizabeth, 2. England. 3. Ireland. 4. Spain.

தலை வேட்கையும் துணிவும் வேரூன்றி எழுந்தன. அந்த எழுச்சியின் பயனாக, அவர்கள் பலவகைகளிலும் பெரிதும் முயன்று முன்னேறத் தலைப்பட்டார்கள். எங் நாட்டு மக்களுக்கும் தாங்கள் எவ்வகையிலும் குறைந்தவர் அல்லர் என்ற உறுதியான மனப்பான்மையுடன் ஆங்கில மக்கள் துணிவு கொண்டு எழுந்தனர்.

மக்களின் மனப்பான்மை முன்னேற்றத்தை நாடியதாயினும், எலிஸபத் இறைவி அதற்குத் துணை செய்ய இயலாதவராய் இருந்தார். ஸ்பெயின் மன்னரான [1]பிலிப் பேராற்றல் படைத்தவராய் இருந்தமையின், எலிஸபத், ஸ்பெயினுடன் பகை கொள்ளாமல் இருக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது. எனினும் வீறுகொண்டு எழுந்த ஆங்கில மக்களின் வேகத்தை யாவர் தடுக்கமுடியும்? இறைவியின் உடன்பாடு இன்றி, வீரர் பலர் ஒன்று சேர்ந்து, சில கப்பல்களைத் திரட்டிக் கொண்டு, ஸ்பெயின் நாட்டின் வணிகக் கப்பல்களைத் தாக்கி அழிக்க முற்பட்டனர். அவ்

1. Phillip.

வாறு முற்பட்டவர்களில் ஒருவர் பெரும் புகழ் பெற்ற [1]**டிரேக்** என்றவர். டிரேக் கடலெங்கும் தம் சிறு கப்பலைச் செலுத்தி, ஸ்பானியப் பகைவர்களை வென்று, தம் இறைவிக்குக் கொணர்ந்த பொருள், அக்காலத்து ஆங்கில அரசாங்கத்தின் ஓர் ஆண்டின் வருவாய்க்கு மிகுதிப்பட்டதென்றும் கூறுவர்.

உலகத்தில் உள்ள நாடுகள் யாவற்றுள்ளும் தங்கள் தாய்நாடே தலை சிறந்து விளங்கவேண்டும் என்று விரும்பி, எழுந்த ஆங்கில மக்களின் முன்னேற்றம் ஸ்பெயின் நாட்டின் ஆற்றலை அடக்கியதோடு முடியவில்லை. அவர்கள் ஒழுங்கான முறையில் வேறு நாடுகளுடன் வாணிபம் செய்து, பொருள் ஈட்டிச் சிறப்படையப் பெரிதும் விரும்பினர். அந்த விருப்பத்தின் பயனாக இலண்டன் மா நகரத்தின் வணிகர் சிலரும் வேறு சில வணிகரும் ஒன்று சேர்ந்து, கீழ்த்திசை நாடுகளுடன் வாணிபம் செய்ய வழி தேடுவாராயினர். அவர்களுக்கு, [2]**இங்கிலாந்தின் வாணிப தீரர்கள்** என்ற பெயர் வழங்கிற்று.

---

1. Drake. 2. Merchant Adventurers of England.

எலிஸபத் ஆட்சியின் இருபத்துமூன்றும் ஆண்டில், அந்த ஆங்கில வாணிபதீரர்கள் ஆசியா கண்டத்துடன் செய்யத்தக்க வாணிபத் துறைகளைப் பற்றி, ஆராய்ந்து வருமாறு சிலரை அனுப்பினர். அவர்களில் ஒருவர் தாம் **ரால்ப் பிட்ச்** என்றவர். ரால்ப் பிட்சும், அவர் நண்பர்களும் நேர் வழியைக் கொள்ளாமல், சுற்று வழியாகவே தங்கள் கலங்களைச் செலுத்துமாறு நேர்ந்தது. ஏனெனில் போர்ச்சுகல் நாட்டினர் நேர் வழியைக் கைப்பற்றிக் கொண்டனர். அவர்கள் ஆங்கிலேயர்களின் தீராப் பகைவரான ஸ்பானியரின் நண்பர்களாய் இருந்தமையின், அவர்களால் ஆங்கிலக் கப்பல்களுக்கு இடையூறு நேருமென்று, பிட்சும் அவர் நண்பர்களும் சுற்றுவழியில் சென்றனர்.

**ரால்ப்** பிட்ச் என்றவர் இங்கிலாந்தின் பழைய குடிகளில் ஒன்றைச் சேர்ந்தவர். அவர் இலண்டன் பட்டினத்து வாணிப முதல்வர்களில் ஒருவர். அவர் உள்ளத்தில் நெடுங்காலமாகக் கடல் கடந்து சென்று, வாணிபம் செய்யவேண்டும் என்ற பெரும் ஆர்வம்

வளர்ந்து வந்தது. எனவே அவர் இங்கிலாந்தின் வாணிப தீரர்களின் சார்பாக ஆசியாவுக்குச் செல்வதற்குக் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டனர். எலிஸபத் இறைவி தந்த வாணிப [1]**உரிமைப் பத்திரம்** ஒன்றையும் கையில் கொண்டு, அவர் தம் நண்பர்களுடன் புறப்பட்டனர்.

அவ்வாறு புறப்பட்ட தீர வணிகர்கள் முதலில் [2]**அலெப்போ** என்ற இடத்திற்குச் சென்று, ஆங்கிருந்து தரைவழியாகப் பாரசீக வளைகுடாவிலுள்ள [3]**பஸ்ரா** என்ற பட்டினத்தைச் சேர்ந்தார்கள். அவ்விடத்தில் சில வணிகர்கள் தங்கிவிட்டனர். பிட்ச் என்றவரும்வேறு மூவரும் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டனர். அவர்களிடத்தில் எலிஸபத் இறைவி [4]**அக்பர்** பெருமன்னருக்கு எழுதிய திருமுகம் ஒன்றும் இருந்தது. பஸ்ராவிலிருந்து புறப்பட்ட அந்நால்வரும் [5]**ஆர்மஸ்** என்ற தீவில் போர்ச்சுகீசியரால் சிறை செய்யப்பட்டனர். எனவே ஆர்மஸ் தீவிலிருந்து அரபிக் கடலின் வழியாக

1. Charter. 2. Aleppo. 3. Basra. 4. Akbar.
5. Ormuz.

இந்தியாவுக்குச் செல்ல விரும்பிய அவர்கள் அவ்வாறு செல்ல இயலவில்லை.

ஆங்கிலேயருக்கு முன்னரே கீழ்த்திசை நாடுகளுடன் வாணிபம் செய்துவந்த போர்ச்சுகீசியர் இந்த ஆங்கில வாணிப தீரர்களின் வருகையை அறிந்து, தம்முடைய வாணிபத்துக்குக் குறைவு ஏற்படும் என்று எண்ணி அஞ்சியே அவர்களைச் சிறைப்படுத்தினர். அவ்வாறு சிறை செய்யப்பட்டவர்கள் இந்தியாவிலுள்ள போர்ச்சுகீசியரின் தலைநகரான [1]**கோவா**விலிருந்த சிறைச்சாலையில் சேர்க்கப்பட்டனர். உண்மையில் வாணிபச் சார்பாக எழுந்த அழுக்காறே இச் செயலுக்குக் காரணமாக இருந்ததாயினும், அந்த வணிகர்களின் கிறித்தவச் சமயநெறியால், வேறுபட்ட தம் கிறித்தவச் சமயநெறிக்கு இடையூறு விளையும் என்ற பொய்க் காரணத்தைப் போர்ச்சுகீசியர் புகன்றனர்.

அக் காலத்தில் பல வகைப் பிரிவுகள் கிறித்தவ மதத்தில் ஏற்பட்டிருந்தன. அந்தப் பிரிவுகளால் மக்களுக்குள் பல பூசல்கள்

1. Goa.

விளைந்தன. ஒவ்வொரு கிறித்தவ நாட்டிலும் மதமுறையில் குற்றம் செய்யும் குற்றவாளிகளைத் தண்டிக்க தனிப்பட்ட வழக்கறி மன்றங்கள் இருந்தன. அவற்றில் ஒன்று கோவாவில் இருந்தது. அந்த மன்றத்துக்கு நம் வணிகதீரர்கள் அனுப்பப்பட்டனர்.

போர்ச்சுகீசியர் தங்கள் வாணிபத்தைக் காத்துக்கொள்ள செய்த இத்தகைய முயற்சி பெரிதும் விந்தையாகவே இருக்கின்றது. வாணிபம் செய்ய விரும்பி, தங்கள் தாய் நாட்டை விட்டுக் கடல் கடந்து வந்து, ஆசியாவின் சில பாகங்களில் குடியேறிய போர்ச்சுகல் மக்கள் குடிபுகுந்த நாட்டைத் தங்கள் உடைமையாகவே கருதிவிட்டனர் போலும். தங்களைப் போல் ஆங்கிலேயரும் வாணிபக்கருத்துடன் ஆசியாவுக்கு வந்தமை அவர்களுடையகுறுகிய தன்னல மனப்பான்மையில் பெருங்குற்றமாகத் தோன்றியது வியப்பன்று. தன்னைத் தானே காத்துக்கொள்ள முடியாத தாழ்ந்த நிலையில் கிடந்த ஒரு நாட்டில், முன் வந்து குடியேறிய தன்னலம் நிறைந்த மக்கள், அதே கருத்துடன் பின்வந்த மக்-

களைத் துரத்த எண்ணுவதில் வியப்பு ஒன்று மில்லை.

கோவாவில் பிட்சும், மற்ற மூவரும் வைக்கப்பட்டிருந்த சிறைக் கூடம் மிகவும் சீர்கேடான நிலைமையில் இருந்தது. சாவாய்க் கைதிகளும், கடுந்தண்டனை அடைந்தவர்களும், அடைத்து வைக்கப்பட்டிருந்த இருண்ட கீழ்அறைகளில் இந்த வணிகர்களும் வைக்கப்பட்டனர். அக்காலத்தில் குற்றவாளிகள் விலங்குகளை விடத் தாழ்வானவர்களாகக் கருதப்பட்டனர். எனவே, அவர்களை ஒதுக்கி வைக்கும் சிறைக் கூடங்கள் மாந்தர் வாழ்க்கைக்குத் தகாதனவா யிருந்தன. இங்கிலாந்தின் சிறைகளும் அக்காலத்தில் அத்தகைய நிலையில் தான் இருந்தன. எனினும் கோவா வில் வணிகதீரர்கள் இருந்த சிறைக் கூடம் பெரிதும் தாழ்ந்த நிலையில் இருந்தது.

மாந்தர் வாழ்க்கையில் நேரும் நிகழ்ச்சிகள் கூர்ந்து கவனிப்பார்க்குப் பல வகைப்பட்டனவாய்த் தோன்றும். சில நிகழ்ச்சிகள் எண்ணியபடி நடப்பனவாய்க் காணப்படும். வேறு சில நிகழ்ச்சிகள் எண்ணத்-

துக்கு மாருக நடப்பனவாய்க் காணப்படும். மற்றும் சில நிகழ்ச்சிகள் தற்செயலாக நடப்பனவாய்த் தோன்றும். இறுதியில் சொல்லப்பட்ட நிகழ்ச்சிகள் ஒருகால் நன்மை தருவனவாயும், மற்ருெருகால் தீமை தருவனவாயும் இருக்கும். இந்த இறுதி வகையைச் சேர்ந்த, நன்மை தரக்கூடிய நிகழ்ச்சி ஒன்று வணிகதீரர்களுக்குக் கோவாவில் நேர்ந்தது.

[1]ஸ்டீவன்ஸ் என்ற ஆங்கிலேயர் ஒருவர் கோவாவிலிருந்த [2]ஜெஸூட் கல்லூரியில் ஓர் உறுப்பினராக இருந்தார். இந்தியாவுக்கு முதல்முதலில் வந்த ஆங்கிலேயர்களில் அவர் ஒருவர். அவர் தம் தாய்நாட்டு வணிகர் சிலர் போர்ச்சுகீசியர் சிறையில் அடைபட்டிருந்ததை அறிந்து, அவர்களைப் பொருள் கொடுப்பித்து மீட்டார்.

ஸ்டீவன்ஸ் செய்த இந்த அருஞ்செயல் மிகவும் புகழ்ச்சிக்கு உரியது. தம் தாய் நாட்டின் மீது அளவுகடந்த பற்றும், தம் நாட்டினர் பல வகையிலும் உலக மக்களுள் சிறக்க

1. Stevens. 2. Jesuit College.

வேண்டுமென்ற ஆழ்ந்த ஆர்வமும் நிரம்பிய ஸ்டீவன்ஸ், வாணிப முன்னேற்றத்தின் வழிகளைக் கண்டு செல்ல, பேரார்வத்துடன் கடல் கடந்து வந்த நம் வாணிப தீரர்களுக்கு வாய்ப்பு அறிந்து செய்த, காலத்தால் சிறந்த இந்த உதவி, பெரும் பாராட்டுக்குரியது அன்றோ! இந்த உதவி இன்றேல் ஆங்கிலேயரின் ஆசிய வாணிபத்தின் வரலாறு மிகவும் மாற்றம் அடைந்திருக்கும் என்றே எண்ண வேண்டும்.

**காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்**
**ஞாலத்தில் மாணப் பெரிது.**

என்ற குறள் ஈண்டு கவனிக்கத்தக்கது.

இவ்வாறு விடுதலை பெற்ற வணிகர்கள் கோவாப்பட்டினத்தில் ஒரு சிறு வீட்டில் தங்கினர். அவர்கள் கண்ட கோவாப் பட்டினம் மிக அழகிய நகரமாக இருந்தது. பல மாளிகைகளும், கிறித்தவர் கோயில்களும் ஸ்பானிய முறையில் கட்டப்பட்டிருந்தன. மேனாட்டார் கீழ்த்திசை நாடுகளில் அமைத்த நகரங்கள் யாவற்றுள்ளும் கோவா பல வகையிலும் தலை சிறந்து விளங்கியது. இயற்கைக் காட்சிகள்

எம் மருங்கும் காண்பார்க்கு மகிழ்ச்சி தந்து விளங்கின. வீதிகளில் போர்ச்சுகீசிய மக்கள் இந்திய அடிமைகளுடனும், நீக்ரோ அடிமைகளுடனும் உலாவி வந்த காட்சி நாடகக்காட்சி போல் கண்ணைக்கவரும் தன்மையதாய் இருந்தது. கடைகளிலெல்லாம் பலவகைப்பொருள்கள் விற்பனைக்கு ஏற்ற முறையில் அழகுபெற அமைக்கப்பட்டிருந்தன. போர்ச்சிகீசியச்செல்வர்களும் பொதுமக்களும், பொருளை மதிப்பறியாமல் செலவுசெய்த காட்சி, அவர்கள் அதனை எளிதில் பெற்றமையைப் புலப்படுத்துவதாய் இருந்தது. வீட்டில் குடிபுகுந்த ஒருவன் அதன் உடைமையாளனை வெளிப்படுத்தி, அடிமை கொண்டதுபோல, போர்ச்சுகீசியர் கோவாப்பட்டினத்தில் வாழ்ந்துவந்த நிலைமை இருந்தது.

ரால்ப் பிட்சும், அவர் நண்பர்களும் இந்தக் காட்சிகளைக் கண்டு மிகுந்த வியப்படைந்தனர். சில நூற்றாண்டுகளுக்குப் பிறகு, தங்கள் நாட்டவரும் இந்திய மண்மேல் இதனினும் சிறந்த நகரங்களை அமைப்பர் என்று, அவர்கள் கற்பனையிலும் கருதவில்லை. தாங்-

கள் மேற்கொண்டு வந்த வினையின்மேல் நாட்டம் வைத்த அவர்கள் கோவாவை விட்டுப் புறப்பட்டுச் செல்லும் நோக்கத்தில் கருத்தா-யிருந்தனர். ஐந்து திங்கள் கழிந்த பிறகு அவர்கள் தாங்கள் செலுத்திய [1]ஈட்டுப்-பொருளைத் திருப்பித் தருமாறு போர்ச்சு-கீசிய ஆட்சித் தலைவரைக் கேட்டனர். அவரோ மீண்டும் அவர்களைத் தண்டிக்கக் கருதுவதாகப் பயமுறுத்தினர். அது கண்ட வணிகர்கள் அஞ்சி, அங்கிருந்து தப்பிச் செல்-லும் வழியைத் தேடுவாராயினர்.

இன்று நாகரிகத்தில் சிறந்தவர்களெனக் கருதப்படும் ஐரோப்பிய மக்கள் அக்காலத்தில் கையாண்ட தண்டனை முறைகள் மிகவும் கொடியனவாய் இருந்தன. குற்றம் செய்த-வனை மேலும் மேலும் கொடிய முறையில் தண்டித்து, அவன் மனப்பாங்கைக் கடினமுறச் செய்வது தவறென்றும், அவன் குற்றத்தை அவனே அறிந்து சீர்திருந்தத் தக்கவகையில் அவனைச் செலுத்தவேண்டு மென்றும் அரசியல் அறிஞர்கள் இந்நாளில் கருதுவதுபோல,

1. Bail money.

அந்நாளில் பிறநாடுகளைக் கைப்பற்றி ஆண்ட ஐரோப்பிய அரசியலார் கருதவில்லை. தமக்கே உரியது எனக்கருதிய வாணிப உரிமையைத் தம்மைப் போன்ற பிறநாட்டவராகிய ஆங்கிலேயர்கள் கைப்பற்றவே வழிதேடுகின்றனர் என்று எண்ணிய போர்ச்சுகீசிய ஆட்சித் தலைவர், நம் ஆங்கில வணிகர்களுக்கு ஒரு கொடுந் தண்டனை விதிக்கக் கருதினார்.

குற்றம் செய்தவனுடைய இரண்டு மணிக் கட்டுகளையும், கயிறுகொண்டு பிணைத்து, அவனைத் தூக்கி, உயர்ந்த கம்பத்தின் மேல் தொங்கவிட்ட பிறகு, திடீரென்று கயிற்றைத் தளர்த்தினால், அவன் தோள் கோப்பு விலகிப் பெரிதும் துன்பம் அடைவன். மீண்டும் மீண்டும் அவ்வாறு செய்து, அவனை மேலும் மேலும் துன்புறுத்துவது ஒரு கொடிய தண்டனையாக அக்காலத்தில் வழங்கியிருந்தது. அந்தத் தண்டனையை நம் வணிகர்களுக்கு விதிக்கப் போர்ச்சுகீசியர் எண்ணினார். அதை அறிந்த அவர்கள் தப்பி ஓட வழி தேடியதில் வியப்பேதும் இல்லை.

ஒரு நாள் விடியற்காலையில் ஆங்கிலேய வணிகர்கள் தப்பிச் சென்றனர். அக்பர் பெருமன்னரால் கட்டி முடிக்கப்பட்ட [1]**படேபூர்-சிக்ரி** என்ற நகரை அவர்கள் சென்று சேர்ந்தனர்: ஆங்கு அக்பர் பெருமன்னர் அமர்ந்து ஆட்சி செய்து வந்த பெருமிதத்தைக் கண்டனர். அவரை நேரில் கண்டு, எலிஸபத் இறைவி தந்த திருமுகத்தைக் கொடுக்க, அவர்கள் விரும்பினார்கள். ஆனால் அவர்கள் விருப்பம் நிறைவேற வில்லை. பெருமன்னரை நேரில் காணும் தகுதி அவர்களுக்கு இல்லையென்று முகலாய அரசியலார் கருதினர். அன்றியும் பெருமன்னரைக் காணுங்கால் காணிக்கை அளிக்கத்தக்க விலை உயர்ந்த பொருள்கள் அப்பொழுது அவர்களிடத்தில் இல்லை. எனவே அவர்கள் அக்பரைக் காணக் கொண்ட விருப்பத்தைக் கைவிட நேர்ந்தது. எனினும் அவர்களில் ஒருவரான [2]**லீட்ஸ்** என்ற அணிகல வாணிபர் பெருமன்னரின் அவையில் வேலையில் அமர்ந்தார்.

1. Fatehpur Sikri. 2. Leeds.

அரிய செயல் செய்யத்துணிவான் ஒருவன் முதலில் ஒரு செய்வகையை வகுத்துக் கொள்வான். வகுத்துக்கொண்ட வகையின்படி திண்ணிய எண்ணத்துடன் செயல்மேல் நாட்டம் செலுத்துவான்.

**எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்**
**திண்ணியர் ஆகப் பெறின்.**

என்ற **குறளின்**படி, திண்ணிய எண்ணம் இலதாயின் எண்ணிய வினையை எண்ணியவாறு முடிப்பது அரிது. அவ்வாறு தக்க செய்வகையின்படி, திண்ணிய எண்ணத்தால் ஊக்கப்பட்டு, வினைசெய்யும் ஒருவன் தன்னை அறியாமல் செய்வகையை மாற்றிக்கொள்ளுமாறு நேர்கின்றது. அவ்வாறு மாறிய வகையின் வழிச்சென்று, செயல் முடிந்தபின், அவன் தன் முயற்சியின் போக்கை நினைத்துப் பார்க்குங்கால், அந்தச் செய்வகையின் மாற்றம் தான்கொண்ட திண்ணிய எண்ணத்தின் வெற்றிக்குத் துணையாகவேனும், மாறாகவேனும் இருந்ததை அறிகின்றான். ஒருவனுடைய செய்வகை அவனை மீறி மாறுவதற்கு **ஊழ்** என்று பெயர்.

ஊழின் பெருவலி யாவுள; மற்றொன்று
சூழினும் தான் முந்துறும்.

என்ற குறள் வெண்பா ஈண்டு அறியத்தக்கது. மனிதனுடைய சிற்றறிவால் அறிய முடியாததும், அவனுடைய சிறிய ஆற்றலால் தடுக்க முடியாததுமே ஊழ் என்று சொல்லப்படும். இத்தகைய ஊழ் ரால்ப் பிட்சின் வாழ்க்கையில் அப்போது குறுக்கிட்டது. அவர் இந்தியாவை விட்டுப் [1]பர்மாவுக்குச் செல்ல வேண்டுமென்று தீர்மானித்தார்.

ஆங்கிலேய நாட்டவரில் முதல் முதலில் பர்மாவுக்குச் சென்றவர் ரால்ப் பிட்ச் என்றவரே. அக்காலத்தில் வாழ்ந்திருந்த ஆங்கிலேய மக்களுக்குப் பர்மாவைப் பற்றி யாதொன்றும் தெரியாது. இதாலி நாட்டவர் இருவர் தங்கள் ஊர்ச்செலவில் பர்மாவின் தலைநகரான [2]பெகு என்ற பட்டணத்தைக்கண்டு, அதைப்பற்றித் தங்கள் பிரயாண வரலாற்றில் எழுதிவைத்த செய்திகளை ஐரோப்பியர் சிலரே அறிந்திருந்தனர். எனவே, பர்மாவைக் கண்டறிந்த முதல் ஆங்கிலேயர் என்ற புகழ் ரால்ப் பிட்சுக்கே உரியதாகும்.

1. Burma, 2. Pegu.

1584-ஆம் ஆண்டில் செப்டம்பர் திங்களில் பிட்ச் பர்மாவுக்குப் புறப்பட்டார். கங்கை ஆற்றின் வழியாக ஓடத்தில் சென்று, அவர் வங்காள மாகாணத்திலுள்ள [1]ஹூக்ளி என்ற பட்டினத்தைச் சேர்ந்தார். ஹூக்ளியில் அக்காலத்தில் போர்ச்சுகீசிய மக்களின் உறைவிடம் ஒன்று இருந்தது. அது கோவாவின் போர்ச்சுகீசிய ஆட்சித் தலைவருக்கு உட்படாமல் இருந்தது. அங்கிருந்து ரால்ப் பிட்ச் [2]சிட்டகாங் சென்று சேர்ந்தார். சிட்டகாங்கில் அவர் ஒரு போர்ச்சுகீசியக் கப்பலில் ஏறி, வங்காள விரிகுடாவின் வழியாகச் சென்று, [3]ஐராவதி ஆற்றின் முகத்துவார நகரங்களில் ஒன்றைச் சேர்ந்தார். அவர் ஐராவதி ஆற்றின் வழியாக மேலும் சென்று, [4]பஸீன் என்ற இடத்தை அடைந்து, அங்கிருந்து சிறுபடகின் வழியாகப் பர்மாவின் தலைநகரான பெகு பட்டணத்தைச் சேர்ந்தார்.

அக்காலத்தில் பர்மாவை [5]நந்தபாயின் என்ற ஒரு மன்னன் ஆண்டு வந்தான். அவன் [6]பாயின் நாங் என்றவனின் மைந்தன். அந்த

1. Hughli 2. Chittagong 3. Irrawady
4. Bassein 5. Nanda Bayin 6. Bayin Naung.

**நாங்** என்றவன் [1]**ஸயாம்** நாட்டைக் கைப்பற்றிய தோடு பர்மா அனைத்தையும் தன் ஆட்சிக்கு உட்படுத்தினன். அவன் தன்னுடைய பெரு நாட்டுக்குத் தலைநகராகப் **புதிய பெகு** என்ற பட்டணத்தைச் சிறந்த முறையில் அமைத்துக் கொண்டான். ஸயாம் நாட்டிலிருந்து கொள்ளை கொண்டுவந்த செல்வத்தால் அவன் தன் தலை-நகரைப் பலவகையிலும் சிறப்பித்துக் கொண் டான். அந்தத் தலைநகரில் அமர்ந்து அவன் மைந்தன் **நந்த பாயின்** ஆட்சி புரிந்து வந்த காலத்தில் தான் ரால்ப்பிட்ச் பெகு பட்டணத்-தைச் சென்றடைந்தார். வேற்று நாட்டவ-ரான பிட்ச் பர்மாவின் செல்வத்தையும், பெருமையையும், பழக்க வழக்கங்களையும் கண்டு திகைப்படைந்தார். பர்மாவில் அக்-காலத்தில் புத்தநெறி பெரிதும் பரவி இருந்-தது. புத்தநெறியினர் கையாண்ட தொழுகை யும், பிற முறைகளும் ரால்ப் பிட்சுக்கு மிக்க வியப்பைத் தந்தன.

பிட்ச் பிற்காலத்தில் தாம் எழுதிவைத்த தம் பிரயாண வரலாற்றில் பெகு நகரத்தைப்

1. Siam

பற்றி விரிவாக வரைந்திருக்கின்றனர். அக்காலத்து இலண்டன் பட்டினத்தை விட பெரு பரப்பில் அகன்றதென்றும், அழகிலும் வன்மையிலும், மக்கள் தொகையிலும் அந்நகரம் பெருமை பெற்றிருந்த தென்றும், அது நாற்புறமும் எல்லைச் சுவர்களால் வரம்பு செய்யப்பட்டிருந்த தென்றும், அந்த எல்லைச்சுவர்களை அடுத்து, மக்களால் எளிதில் கடத்தற்கு அரிய, நீர்நிறைந்த ஆழ்ந்த அகழி இருந்ததென்றும், அதில் கொடிய முதலைகள் நிரம்பியிருந்தன வென்றும், பெரு பட்டணத்திற்கு இருபது வாயில்கள் இருந்தன வென்றும், அந் நகரத்துச் சாலைகள் யாவும், நேராக எதிர் எதிர் அமைக்கப்பட்ட வாயில்களைச் சேர்ப்பன வாய், இருந்தன வென்றும், அச் சாலைகளின் அகலம் ஒருங்கே பதின்மர் பரி ஏறி செல்லத்தக்கதாய் இருந்ததென்றும் அவர் தாம் எழுதிய வரலாற்றில் குறித்து வைத்திருக்கின்றார். மன்னனின் மாளிகை நகரின் நடுவில் விளங்கியிருந்த தென்று அவ்வரலாற்றால் தெரிகின்றது. அம் மாளிகையின் அமைப்பையும் பிட்ச் விரிவாக எழுதியிருக்கின்றனர். அது

மரத்தால் கட்டப்பட்ட தென்றும், அதில் சித்திர வேலைப்பாடுகள் நிறைந்திருந்தன வென்றும் தெரிகிறது. அம் மாளிகையின் எதிரில் யானைப் பந்திகள் இருக்கும் கட்டடங்கள் இருந்தன எனவும், அவற்றில் பலநூறு கரிய யானைகளும், நான்கு வெள்ளை யானைகளும் இருந்தன எனவும் சொல்லப்படுகிறது. கீழ்த்திசை நாடுகளின் மன்னர்களின் வாழ்க்கையின் பெருமிதத்தையும் உயர்வையும் கேட்டும் அறியாத பிட்ச், பெகு நகரின் செல்வப் பெருமையையும், அதன் மன்னனின் பெருமித வாழ்க்கையையும் கண் கூடாகக் கண்டு மயங்கினர்.

பிட்ச் பெருமன்னரின் வெள்ளை யானைகளைக் காண விரும்பினர். அந்த யானைகளைக் காண விரும்புவார் சிறு கட்டணம் கொடுத்துக் காண வேண்டும் என்று மன்னர் ஏற்பாடு செய்திருந்தனர். எனவே, பிட்சும் சிறு கட்டணம் கொடுத்தே அவற்றைக் காணச் சென்ருர். அவற்றின் தங்கு விடுதிகள் பொன்னல் இழைக்கப்பட்டிருந்தன. காவலர்கள் தங்க உண்கலங்களில் அந்த யானைகளுக்கு இரை

தந்தனர். அவை கட்டுப்பந்தியிலிருந்து குளி-யல் துறைக்குச் செல்லும்போதும், குளித்து மீளும்போதும், கருவி இசை முழங்கியது. குளியல் துறையிலிருந்து கரை ஏறியவுடன், ஒருவர் அவற்றின் சேறு படிந்த கால்களைப் பொற்குவளையிலிருந்து நீர் பெய்து தூய்மை படுத்தினர். இக்காட்சிகளைக் கண்டு நம் ஆங்கில வணிகர் வியப்பு அடைந்தார். வெள்ளை யானைகளை அக்காலத்துப் பர்மா மக்கள் தொழுதற்குரிய தெய்வப் பிறவிகளா-கவே கருதினர். அவற்றைப் பற்றிய பல கதைகளும் அந்நாட்டில் அக்காலத்தில் வழங்கியிருந்தன.

இவ்வாறு நகரக் காட்சிகளையும் அரும் பொருள்களையும் கண்டு களித்த ரால்ப் பிட்ச் தம் தாய்நாட்டை விட்டுக் கீழ்த்திசை நோக்கி வந்த நோக்கத்தை மறந்திலர். பர்மாவுடன் ஆங்கில வணிகர்கள் வாணிப உறவுகொள்-ளும் வகையை அவர் ஆராய்ந்தறியத் தொடங்-கினர். அந்நாட்டில், அக்காலத்தில், கிடைத்த உள் நாட்டுப் பொருள்களைப் பற்றியும் அவர் பல உண்மைகளைத் தெரிந்து கொண்டனர்.

தம் நாட்டவர் அந் நாட்டவருக்கு வாணிப முறையில் தரத்தக்க பொருளைப்பற்றியும் அவர் தெரிந்துகொண்டார். எலிஸபத் இறைவியினிடத்திலிருந்து அக்பர் பெருமன்னருக்குக் கொண்டுவந்த திருமுகம்போல, பர்மா மன்னருக்குத் தரத்தக்க திருமுகம் ஒன்றும் அவரிடத்தில் இல்லை. அத்தகைய திருமுகம் இருந்திருப்பின் அவர் ஒருகால் நந்தபாயின் மன்னனைக் கண்டு உரையாடி, தம் நாட்டவருக்கு வாணிப உரிமை ஏதேனும் பெற்றிருத்தல் கூடும். அம்மன்னனை நேரில் காணத்தக்க பல எளிய வாய்ப்புகள் நேர்ந்தும், பிட்ச் அவரைக்காண விரும்பவில்லை. ஆனால், அவர் மன்னனைக் காண முயல்வதில் காலங்கழிப்பதைவிட, அவனுடைய உண்மையான பலத்தை அளந்தறிவதே பயன் தரும், என்று கருதி, அவ்வினையில் கருத்தாயிருந்தார்.

அக்காலத்துக் கீழ்த்திசை நாட்டுமன்னர் பெரும்படைகளைச் சேர்த்துப் புகழ் பெறுவதில் பெரிதும் நாட்டமாயிருந்தனர்.

**படைகுடி கூழ் அமைச்சு நட்பரண் ஆறும்**
**உடையான் அரசருள் ஏறு.**

என்ற வள்ளுவரின் வாய்மொழியின்படி, ஓர் அரசனுக்கு இன்றியமையாமல் இருக்கத்தக்கன பெரும்படையும், வளமான குடியும், நிறைந்த உணவும், தக்க அமைச்சும், வலிய நட்பும், திடமான அரணும் ஆவன. அவற்றுள் படை ஒன்றையே அக்காலத்து மன்னர்கள் பலர் நம்பியிருந்தனர். அவர்கள் நான்கு வகைப்பட்ட படைகளை வைத்திருந்தனர். அவை யானைப்படை, தேர்ப்படை, பரிப்படை, காலாட்படை என்பன. அந்த நால் வகைப் பட்ட படைகளில் நந்தபாயின் ஓரளவு சிறந்திருந்தான். எனினும் கடலின் வழியாக வரத்தக்க பகைவர்களைத் தடுத்தற்கேற்ற கப்பற் படை அவனிடத்தில் இல்லை. பொதுவாகவே அக்காலத்துக் கீழ் நாட்டு மன்னர்கள் நால்வகைத் தரைப்படைகளைத் திரட்டினரே அன்றி, கப்பல் படையில் பெருவலிவு கொண்டார் அல்லர். அக்குற்றமே மேனாட்டார் கீழ் நாட்டாரை அடிமைப்படுத்தப் பிற்றைய நாளில் பெருந்துணையாக இருந்தது. இந்த உண்மையைப் பிட்ச் நன்ருய்த் தெரிந்து கொண்டார்.

இவ்வாறு ரால்ப் பிட்ச் சில ஆண்டுகள் பர்மாவில் தங்கி, ஆங்கில வாணிப தீரர்களின் நோக்கத்திற்கு உதவியாக பல உண்மைகளை ஆராய்ந் தறிந்துகொண்டார். அவர் **சயாம்** நாட்டின் தலைநகரான [1]**சீங் மாய்** என்ற பட்டணத்துக்குச் சென்று, அதன் வாணிப நிலைமையையும், முறைகளையும் தெரிந்து கொண்டனர். பின்னர் அவர் பெகு நகரத்திற்கு மீண்டு, சிலகாலம் அங்கிருந்து, பிறகு கப்பலேறி, [2]**சிங்கப்பூருக்கு** அருகிலிலுள்ள [3]**மலாக்கா**வைச் சென்று சேர்ந்தார். அந்நகரில் இருந்த போர்ச்சுகீசியர் கோட்டை ஒன்றைக் கண்டார். மலாக்காவின் வழியாகக் கீழ்த்திசை நாடுகளுடன் மேனாட்டார் வாணிபம் செய்தல் எளிதாக இருக்குமென்று அவர் தெரிந்துகொண்டனர். மலாக்காவை விட்டு அவர் பெகுவுக்கு மீண்டார். சிலகாலம் அங்கிருந்து, பிறகு தாய்நாட்டை, **இலங்கை, கொச்சி, கோவா, பஸ்ரா, பாபிலோன்,** [4]**மோஸல், அலெப்போ** ஆகிய நகரங்களின் வழியாகச் சென்று சேர்ந்தனர்.

1. Chieng Mai 2. Singapore 3. Malacca
4. Mosul

ரால்ப் பிட்ச் சற்றேறக்குறைய எட்டு ஆண்டுகள் தம் ஊர்ச் செலவில் கழித்தார். அக்காலத்தில் எவ்வகையான நீண்ட காலப் பிரயாணமும் யாவராலும் மேற்கொள்ளத் தக்க எளியமுறையில் இல்லை. தரைச்செலவும், கடற்செலவும் பெரும் இடையூறுகளுக்கு இடமாயிருந்தன. அக்காலத்தில் பெரும் பாலும் தனிமையாகவே, ரால்ப் பிட்ச் தாய் நாட்டைவிட்டு, நெடுந்தூரத்துக்கப்பால் உள்ள வேற்று நாடுகளில் உறுதியுடன் பிரயாணம் செய்தது மிகவும் பாராட்டுதற்குரியது. அன்றியும் அக்காலத்து ஆங்கில மக்களின் திண்ணிய மனப்பான்மையின் அறிகுறியாக வும் அது கொள்ளப்படவேண்டும்.

உழவுக்கு வேண்டிய வளங்கள் குன்றந்தும், பரப்பில் சுருங்கியும், இயற்கை அமைப்பால் என்றும் இன்னலுக்கு உள்ளாகியும், செல்வ நிலையில் குறுகியும் இருந்த அக்காலத்து ஆங்கில நாடு, உலகப் பெரு நாடு களில் ஒன்றாக விளங்க விரும்பி, மேற் கொண்ட ஓர் உள்ளத்துணிவின் உருவகமே ரால்ப் பிட்ச் என்று கருதலாம். தாய் நாட்டின்

நலத்தைத் தம் நலத்தினும் சீரியதாய்க் கருதிய பிட்ச் தம் பிரயாணத்தில் கண்டறிந்த உண்மைகளே பிறகு [1]**கிழக்கிந்திய வாணிபக் கழகத்தின்** ஆக்கத்திற்கு அடிகோலியன. இல்லற இன்பங்களைக் கைவிட்டு, இன்னல் நிறைந்த வினையை மேற்கொண்டு, பெரிதும் வருந்தி, தம் நாட்டவருக்குப் பெருந்தொண்டு செய்த ரால்ப் பிட்ச், மூன்று நூற்றாண்டுகளுக்குள், தம் நாட்டவர் தாம் சென்று கண்ட நாடுகளையெல்லாம் ஆளும் பேற்றினைப் பெறுவர் என்று, கனவிலும் கருதியவர் அல்லர். தம் கடமை என உணர்ந்ததை அவர் செய்து முடித்தார். தாய் நாடு திரும்பிய அவர் சிலகாலம் வாழ்ந்திருந்து, பிறகு 1611-ஆம் ஆண்டில் உயிர் துறந்தார்.

**துன்பமுற வரினுஞ் செய்க துணிவாற்றி**
**இன்பம் பயக்கும் வினை.**

---

1. East India Company

## *ஸர் தாமஸ் ரோ

**மா**ந்தர் வாழ்வு தொடங்கிய காலத்தின் பழமை, கற்பனை ஆற்றலுக்கும் அப்பாற்பட்டது. அவ்வளவு தொன்மையுடைய மாந்தர் வாழ்வின் வரலாற்றில், முன்னொரு காலத்திலிருந்த மக்களின் அருஞ் செயல்களின் பயன்களைப் பின்னொரு காலத்தில் வாழ்பவர் பெறுகின்றனர். அவ்வாறு பெறுவதனால் மாந்தர் வாழ்வு காலச்செலவில் மேலும் மேலும் பெருகும் நன்மைகளைப் பெறுகின்றது. அத்தகைய நன்மைகளில் ஒன்றே நாட்டின் நலம் என்பது. அந்த நாட்டின் நலத்தைத் தேட விரும்புவோரே நாட்டுப்பற்றுடையோர் எனப்படுவர்.

நாட்டின் நலங்கருதி உழைக்கத்துணிந்தவனுக்கு ஏந்தச் செயலும் அரிய செயல் ஆகாது.

**இன்பம் விழையான் வினைவிழைவான் தன் கேளிர்**
**துன்பம் துடைத்தூன்றும் தூண்.**

என்ற குறள் இங்கு அறிதற்குரியது. இன்ப வாழ்க்கையில் விருப்பம் கொள்ளாமல், அரிய

* Sir Thomas Roe

செயல் செய்யவே விரும்பும் ஒருவன், தன் இனத்தாரின் துன்பத்தைத் துடைத்து ஊன்றும் தூண் போன்றவன், என்பது குறளின் கருத்து. இத்தகைய தூண் போன்றவர்பலர் இங்கிலாந்தில் அக்காலத்தில் இருந்தனர். அவர்களில் ஒருவர் **ஸர் தாமஸ் ரோ.**

இயற்கையால் சிறுமை படைத்த இங்கிலாந்தைத் தம் முயற்சியால் பெருமை படுத்த எண்ணிய ஆங்கிலேயர் முதலில் அதனைச் செல்வத்தில் சிறந்த நாடாக்க முனைந்தார்கள். அந்த முனைப்பே பல இடையூறுகளுக்குப் பிறகு **கிழக்கு இந்திய வாணிபக் கழகம்** என்ற வடிவம் கொண்டது. அந்தக்கழகத்துக்கு அக்காலத்து அரசியலாரின் உதவியும் கிடைத்தது.

**இயற்றலும், யீட்டலும், காத்தலும், காத்த**
**வகுத்தலும், வல்ல தரசு.**

என்ற **குறளின்**படி ஒரு நாட்டின் அரசு அதன் பொருள் நிலையைப் பெருக்கும் வழிகளைத் தேடவேண்டும். அத்தகைய வழிகளில் ஒன்று ஈட்டல் என்பது. அவ்வழியில் முயல முற்பட்ட கிழக்கு இந்திய வாணிபக் கழகத்-

துக்கு அரசியலார் உதவி அளித்தமை தக்க செயலே ஆகும்.

கிழக்கிந்திய வாணிபக் கழகத்தார் இந்தியாவுக்கு முதல் முதலில் செலுத்திய கப்பல் இந்த நாட்டை 1608-ஆம் ஆண்டில் வந்து சேர்ந்தது. அதன் தலைவர் [1]**வில்லியம் ஹாகின்ஸ்** என்றவர். அவர் இந்தியாவின் மேற்குக் கரைத் துறை முகப் பட்டினங்களில் ஒன்றான [2]**சூரத்** என்னும் பட்டினத்தை முதலில் வந்து சேர்ந்தார். பிறகு [3]**ஆக்ரா** நகரத்திற்குச் சென்றார். அந் நகரில் அமர்ந்து ஆட்சி செலுத்திய [4]**ஜஹாங்கீர்** பெரு மன்னரைக் கண்டு, தம் நாட்டிற்கு இந்தியாவில் வாணிப உரிமை பெற அவர் விரும்பினர். மூன்று ஆண்டுகள் ஹாகின்ஸ் ஆக்ராவில் தங்கினர். சூரத் நகரத்தில் தங்கி வாணிபம் செய்யும் உரிமை கழகத்தார்க்கு முதலில் அளிக்கப்பட்டது. ஆயினும் ஜஹாங்கீர் பெரு மன்னரின் பேரவையில் நிறைந்திருந்த போர்ச்சுகீசியக் கிறித்தவக் குரவர்களின் சூழ்ச்சியால் அந்த உரிமை விரைவில் மறுக்கப்பட்டதோடு, ஹாகின்ஸ் 1611-ஆம் ஆண்டில் நாடு கடத்தப்பட்டார்.

1. William Hawkins 2. Surat 3. Agra 4. Jahangir

அதன் பின்னர் கழகத்தாரின் சார்பாகத் [1]தாமஸ் பெஸ்ட் 1612-ஆம் ஆண்டில் சூரத்தில் சில வாணிப உரிமைகளைப் பெற்றார். அவை அவ்வளவு சிறப்பு உடையன அல்ல. ஜஹாங்கீர் பெருமன்னரிடம் இருந்து, அவர் நாடெங்கும் வாணிபம் செய்வதற்கு ஏற்ற உரிமைப்பத்திரத்தைப் பெற கழகத்தார் விரும்பினர். அவ்வாறு உரிமைப்பத்திரம் பெற்றால், தங்கள் வாணிபம் இந்தியாவில் நிலைத்தோங்குமென்று அவர்கள் எண்ணினார்கள். எனவே, தங்கள் எண்ணம் நிறவேறுதவாறு போர்ச்சுகீசியர் செய்துவந்த சூழ்ச்சிகளையும் தடைகளையும் வெல்லத்தக்க ஒருவரை ஜஹாங்கீர் பெருமன்னர் அவைக்குத் தூதராக அனுப்ப அவர்கள் கருதினார்கள். தூது சென்று மேற்கொண்ட வினையைத் திறத்துடன் முடித்தற்கு ஏற்ற தகுதிகளைப் பெற்ற ஒருவர் அக்காலத்தில் இங்கிலாந்தில் கிடைத்தல் பெரிதும் அரிதாயிருந்தது.

யாவர் மாட்டும் அன்பொடு ஒழுகும் இயல்பும், உயர் குடிப் பிறப்பும், கூர்ந்த அறிவும்,

1. Thomas Best

சொல்வன்மையும், பரந்த கல்வியும், சிறந்த உருவும், நகைச்சுவை தோன்ற பேசும் திற-னும், கடமை உணர்ச்சியும், வாய்ப்பு அறிந்து செயல் செய்யும் திறனும், மனத்தூய்மையும், துணிவுடைமையும், கடுஞ் சொல் கூறாப்-பான்மையும் உடைய ஒருவனே தூது சென்று வினை முடித்தற்குத் தக்கவன்.

**அன்பறி வாராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்**
**கின்றியமையாத மூன்று.**

எனவும்,

**அன்புடைமை, ஆன்ற குடிப்பிறத்தல், வேந்தவாம்**
**பண்புடைமை, தூதுரைப்பான் பண்பு.**

எனவும்,

**கடனறிந்து, காலம் கருதி, இடனறிந்**
**தெண்ணி, உரைப்பான் தலை.**

எனவும், வரும் குறள் வெண்பாக்களின் கருத்-துக்களை ஈண்டு நன்கு அறிதல் வேண்டும். இத்துணைத் தகுதிகளை ஒருங்கே பெற்ற ஒரு-வர் தூது செல்ல உடன்பட்டு முன் வருதலும் அரிது. எனினும் கிழக் கிந்திய வாணிபக்கழ-கத்தார் அந்நாளில் அவர் நாட்டில் வதிந்-திருந்த தக்கார் சிலருள் ஒருவரைத் தம் வினைக்கு ஏற்றவராகத் தேர்ந்தெடுத்தனர். அவரே ஸர் தாமஸ் ரோ.

**ஸர்** தாமஸ் ரோ இங்கிலாந்தின் பொது மன்றத்தின் உறுப்பினராய் இருந்தனர். தென் அமெரிக்காவின் சில பகுதிகளையும் அவர் கடல் கடந்து சென்று கண்டுபிடித்தனர். அவருடைய தந்தையின் தந்தை இலண்டன் பட்டினத்தின் [1]நகரத் தலைவராய் இருந்தவர். 1614-ம் ஆண்டில் வாணிபக் கழகத்தினர் அவரை இந்தியாவுக்கு அனுப்பினர். அப்பொழுது அவருக்கு வயது முப்பத்து நான்கே. இங்கிலாந்தின் மன்னரான **ஜேம்ஸ்** ஜஹாங்கீர் பெருமன்னருக்கு ஒரு திருமுகம் வரைந்து அளித்தனர். அதையும் கைக் கொண்டு **ரோ** புறப்பட்டனர்.

அவர் நேரே சூரத் பட்டணத்தைச் சென்று சேரவேண்டும் என்றும், அங்கு தங்கி போர்ச்சுகீசியர் செய்யும் சூழ்ச்சிகளின் விளைவை விலக்கிப் பெருமன்னரின் ஆதரவைப் பெறவேண்டும் என்றும், இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் இடையே எவ்வகைத் தடையும் அற்ற வாணிப உறவை ஏற்படுத்த முயல வேண்டும் என்றும், வாணிபக் கழகத்தார் ரோவுக்குத் தெரிவித்து அனுப்பினர். ஆயி-

1. Mayor

னும் பெருமன்னரின் பேரவையில் தக்க முறையில் தோன்றும் வாய்ப்பினை அவர்கள் ரோ-வுக்கு அளித்தார் அல்லர். பெருமிதம் நிறைந்த முகலாய மன்னர் அவையில் குறிப்பொடு விளங்குதற்கு, ரோவுக்குத் தக்க ஆடைகளும் ஏவலாட்களும் பிற மதிப்புகளும் இன்றியமையாதனவாய் இருந்தன. அவற்றை அவருக்குத் தக்கவாறு அளிக்கும் செல்வ ஆற்றல் வாணிபக் கழகத்தார்க்கு இல்லை. எனவே அவர்கள் அவருக்கு ஆண்டுக்கு அறுநூறு பௌன் ஊதியத்தையும், ஒரு மருத்துவரையும், ஒரு மத குருவையும், அவர்களுக்கு உரிய செலவையும் தந்தனர்.

ரோ 1615 - ஆம் ஆண்டில், செப்டம்பர் திங்களில், ஒரு நாள் சூரத் வந்து சேர்ந்தார். கல்வி அறிவிலும் பெருந்தன்மையிலும் சிறந்த அவர் தாம் மேற்கொண்டு வந்த வினையைச் செய்துமுடிக்க, தம் மதிநுட்பத்திலும், மன-வுறுதியிலும், சொல் வன்மையிலும் நம்பிக்கை வைத்தார். தனக்கு உரிய ஐயாண்டு ஊதியத் தொகையைக் கொண்டும் முகலாயப் பேரவைக்கு அணிந்து செல்லத் தக்க ஓர்

உடையைப் பெறுதல் இயலாது என அறிந்த அவர், முகலாயப் பெருமன்னரைச் செல்வத் தோற்றத்தால் கனிவிக்க முயலாமல், தம் சூழ்ச்சியால் கனிவிக்கவே முயன்றார்.

**ரோ** கண்ட முகலாய நாகரிகம் பெரும்பாலும் பாரசீக நாகரிகத்தைத் தழுவியதாயிருந்தது. முகலாயர்கள் பாரத நாட்டில் நுழைந்து, தங்கள் பெருநாட்டை நாட்டிய காலத்திற்கு முன்னரே, அவர்களுக்குப் பாரசீகத் தொடர்பு ஏற்பட்டிருந்தது. ஏறக்குறைய ஆறு நூற்றாண்டுகளாய் மகம்மதிய மதத்தைச் சேர்ந்த பிரிவினர் பலர் இந்நாட்டில் தங்கள் அரசியலை ஊன்றியிருந்தனர். அவர்தம்முள் ஒரு சில பிரிவினர் பழங்குடிகளான இந்துக்களின் நாகரிகத்தில் மாற்றங்கள் செய்ய முயன்றரேனும், பெரும்பான்மையோர் இந்து மக்களின் சீலத்தைச் சீர்குலைக்க விரும்பாமல், வாளா இருந்தனர். ஆகலான் ரோ கண்ட முகலாயர் பெருநாட்டில் இருவகை நாகரிகங்களும் சிறந்திருந்தன. இலக்கியத்திலும் ஓவியத்திலும் ஒழுக்கத்திலும் முகலாயரும் இந்துக்களும் தம் தம் முறையில் சிறந்து விளங்கினர். அன்றி-

யும் **அக்பர்** பெருமன்னர் காலம் தொடங்கி இந்துச் செல்வர்களும் முகலாயச் செல்வர்களும் தம்முள் கலப்பு மணம் செய்துகொள்ளும் வழக்கத்தை மேற்கொண்டனர். அதனுல் இரு வேறு நெறியினரும் உறவினராகுமாறு நேர்ந்தது. அக்காரணத்தால் முகலாய ஆட்சியில் உயர்குடி இந்துச் செல்வர்களுக்கு உயர்ந்த அரசியல் வினைகள் கிடைத்தன.

இவ்வாறு நாட்டில் அமைதி நிலவியிருந்தமையின், உயர்குடிமக்கள் பலரும் பொழுது போக்கிலும் மனமகிழ்ச்சி தரும் பயிற்சிகளிலும் ஈடுபட்டிருந்தனர். அக்காலத்தில் தம் நாட்டைச் சுற்றியிருந்த பிறநாடுகளில் நிகழ்ந்த சிறந்த நிகழ்ச்சிகளை அவர்கள் அறிந்துகொள்ள முயலவில்லை. தங்கள் நாட்டுக்குப் பிறநாட்டாரால் ஏற்படக்கூடிய தீமைகளையும் அவர்கள் தெரிந்து கொள்ள முனையவில்லை. வாழ்க்கையின் பல துறைகளிலும் மனநிறைவு கொண்ட முகலாய இந்திய மக்கள் எதிர்காலவாழ்வின் உருவத்தைக் கற்பனையிலும் கருதிக் காண முயன்றாரல்லர். ஆயின், வாழ்க்கை நலன்களை முழுதும் நுகர-

மாட்டாமல், வேட்கைப் பசியோடு இருந்த ஐரோப்பிய மக்கள் மேன்மேலும் தங்கள் வாழ்க்கையைச் சிறப்பித்துக் கொள்ளும் வழிகளிலியே நாட்டமாய் இருந்தனர். அவர்கள் பெரிதும் முயன்று பலவகையான அறிவியல் புதுமைகளையும் பொருள்களையும் கண்டு பிடித்தனர். அன்றியும் எந்நாட்டிற்கும் எளிதில் செல்லத்தக்க கடல் வழிகளையும் அவர்கள் அரிதில் முயன்று அறிந்திருந்தனர்.

ஆங்கிலேயரின் முற்போக்கின் முளைபோன்ற ஸர் தாமஸ் ரோ கீழ்நாட்டின் ஆரவாரத்தின் அடிப்படையான முகலாய ஆட்சியின் அமைதியில் வந்து தங்கி, தம் திறமை என்னும் குருத்தை விரித்தார். ஜஹாங்கீர் பெருமன்னரின் உவகைக்குரிய மைந்தரான [1]**குர்ரம்** இளவரசர் ஜஹாங்கீரின் பட்டத்தரசியான [2]**நூர்மஹாலுடன்** கூடி, போர்ச்சுகீசியரின் சார்பாகப் பெரு மன்னரிடம் அவ்வப்போது பரிவு கூறுவாராயினர். அவர்களுடைய உற்ற நண்பரான [3]**சுல்பிகார் கான்** என்றவர் சூரத் நகரின் தலைவராக இருந்தார். அவரும் போர்ச்சு

1. Kurram 2. Nur Mahal 3. Sulphikhar Khan

இசியர் பால் பரிவு கொண்டவராயிருந்தார். ஆதலான் ஆங்கிலத் தூதராக வந்த ரோவின் வரவு ஜஹாங்கீர் பெருமன்னரின் செவிக்கு எட்டவில்லை. அன்றியும் சூரத்தில் தங்கியிருந்த ரோ பெருமன்னரின் தலைநகராய் இருந்த **ஆஜ்மீர்** பட்டணத்திற்குச் செல்ல முயன்றதைச் சுல்பிகார்கான் பல இடையூறுகள் விளைத்துத் தடுத்தார். அந்த இடையூறுகளை எல்லாம் ரோ தம் சூழ்ச்சியால் வென்று, தம் வரவைப் பெருமன்னர் அறிந்து கொள்ளுமாறு செய்-தார். அதன்பின் அவர் கட்டளைப்படி ஆஜ்மீர் நகரத்தை டிஸம்பர் திங்கள் பதின்மூன்றும் நாளில் சென்று சேர்ந்தார்.

> **இடுக்கண் வருங்கால் நகுக ; அதனை**
> **அடுத்தூர்வ தஃதொப்ப தில்.**

எனவும்

> **அற்றே மென்றல்லல் படுபவோ பெற்றேமென்**
> **றோம்புதல் தேற்றா தவர்.**

எனவும் வரும் **வள்ளுவர் குறள்** வெண்பாக்கள் ஈண்டு அறிதற்குரியன. தாய் நாட்டை விட்டு, வேற்று நாட்டுக்கு வந்து, அந்நாட்டவரின் எதிர்ப்பையும் வென்ற ரோ இடுக்கண்களைக் கண்டு நகைத்தாரே அன்றி, அழிந்தோம்

என்று அல்லல் பட்டார் அல்லர். இடையூறுகளை வென்று, மேற்கொண்ட பொருளைப் பெறு-வோம் என்று, மேற்கொண்டு முயல்வதிலேயே நாட்டம் கொண்ட அவர் பெருமன்னரைக்-காணச் செய்த முயற்சி வெற்றி பெற்றமை வியப்பன்று. ஆஜ்மீர் நகரத்தை அடைந்த ரோ தாம் பெருமன்னர் பேரவையில் எடுத்துச் சொல்லுதற்கேற்ற உண்மைகளையும், தாம் அங்கு நடந்து கொள்ளவேண்டிய முறைகளை-யும் நன்கு சிந்தித்துக்கொள்ளத் தலைப்பட்டார்.

ஜனவரித் திங்கள் பத்தாம் நாளில் ஜஹாங்-கீர் பெருமன்னர் அவரைத் தம் அவைக்கு வருமாறு கட்டளையிட்டிருந்தார். அக்கட்டளை-யின்படி, அவரைச் சென்று காண்பதற்கு முன், ரோ தம்மைப் பல வகையிலும் திறமை உடையவராகச் செய்து கொள்ளவேண்டியது இன்றியமையாததாய் இருந்தது. அவர் தம்மை ஒரு தனிப்பட்ட மனிதராகக் கருதாமல், இங்கி-லாந்தின் பெருமிதத்தின் அறிகுறியாகவே கருதினார். எனவே அவர் ஜஹாங்கீர் பெரு மன்னரின் அவையில், தம் அருமையும் தம் நாட்டின் பெருமையும் புலப்படுமாறு நடந்து

கொள்ள வேண்டுமென்று தீர்மானித்தார். அன்றியும் கைப்பொருள் கருதியேனும், அரசியல் வன்மைக்கு அஞ்சியேனும், தாம் மேற்கொண்ட நெறியிலிருந்து விலகுதல் கூடாதென்று துணிவு கொண்டார். துடிதுடிப்புடன், காலமும் இடமும் கருதாமல் உரையாடி, கருதிய வினையைக் கெடுத்துக் கொள்ளாமல், பொறுமையுடன் இருந்து, காலமும் இடமும் அறிந்து, சொல் வன்மையால் தம் கருத்தை முடித்துக் கொள்ள வேண்டுமென்று அவர் கருதினார். இங்கிலாந்துடன் வாணிபம் செய்வதால் இந்தியாவுக்கு ஏற்படக் கூடிய நன்மைகளை எடுத்துக் கூறியும், பெரும் பரப்புள்ள இந்த நாட்டில் ஆங்கிலேயர் வாணிபமும் போர்ச்சுகீசியர் வாணிபமும் ஒருங்கே பூசல் இன்றிச் சிறக்கக் கூடும் என்று எடுத்துக் கூறியும், பெரு மன்னரின் உடன் பாட்டை ரோ பெற விரும்பினார்.

வாணிப நலம் கருதி, ஆங்கிலேயருக்கு மாறாக இந்தியாவில் அடிகோலிய போர்ச்சுகீசியரின் பலத்தை ரோ தம் அறிவால் அளந்து பார்த்தார். இந்திய மண்மேல் அஞ்-

ஞான்று போர்ச்சுகீசியரின் பலம் ஆங்கிலே-யரின் பலத்தை விடப் பெரியதாய் இருந்ததெ-னினும், முனைந்து முயன்றால் அவர்களை இந்-தியாவை விட்டுத் துரத்த ஆங்கிலேயர்களால் கூடும் என்று ரோ தெளிந்தார். எனினும் முக-லாய அரசியலார் தம் நாட்டில் பிற நாட்டவர் வந்து பூசல் விளைப்பதை விரும்பார் என்று எண்ணி, ரோ போர்ச்சுகீசியரைப் பகைத்துக் கொள்ள விரும்பினார் அல்லர். அன்றியும் போர்ச்சுகீசியரின் வாணிப ஆவலுக்கு இடையூறு செய்ய, டச்சுக்காரர்களும் இந்தி-யக் கடல்களில் தலைகாட்டத் தொடங்கினர். அவர்களும் இந்தியாவுடன் தடையற்ற வாணி-பம் செய்ய விரும்பிப் போர்ச்சுகீசியரின் தன்னல விருப்பத்திற்கு மாறாக முயற்சி செய்-வர் என்றும் ரோ எதிர் பார்த்தனர். எனவே, அவர் தம் அறிவுத் திறமையால் மேற்கொண்ட வினையை முடித்துக் கொள்ளத் துணிந்தார்.

1616—ஆம் ஆண்டில் ஜனவரி திங்கள் பத்தாம் நாள் வந்துற்றது. ஸர் தாமஸ் ரோ ஜஹாங்கீர் பெருமன்னரின் பேரவைக்குச் சென்றார். அங்கு அவர் தக்கவாறு வரவேற்-

கப்பட்டார். அவையில் பெரு மன்னரின் மதிப்புக்கேற்ற உயர் குடிச் செல்வர்கள் அமர்ந்திருந்த பகுதியில் ரோ அமர்த்தப்பட்டார். அவர் மேனுட்டு முறையின்படி ஜஹாங்கிருக்கு மும் முறை வணக்கம் செய்தார். செய்த பிறகு ஜேம்ஸ் மன்னர் கொடுத்த திருமுகத்தைப் பெருமன்னருக்கு அளித்து, சில விலை உயர்ந்த காணிக்கைகளையும் கொடுத்தார். ஜஹாங்கீர் மகிழ்ச்சியடைந்து ரோவின் உடல் நலம் பற்றி வினவினர்; தம்முடைய மருத்துவரையே அவருக்கு மருத்துவம் செய்யக் கட்டளை செய்வதாகவும் கூறினர். இவ்வாறு வெறும் முகமன் மொழிவதில் வரவேற்பு முடிந்தது. தாம் கருதி வந்த உதவியைப்பற்றி ரோ பெருமன்னரிடம் யாதொன்றும் பேச இயலவில்லை. பெருமன்னரும் ரோவை அவர் வந்த நோக்கத்தைப் பற்றி ஒன்றும் கேட்கவில்லை.

**ரோ**வுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு பெருமன்னரால் டர்க்கி நாட்டுத் தூதருக்கும் பெர்ஷியா நாட்டுத் தூதருக்கும் அளிக்கப்பட்ட வரவேற்பை விடச் சிறந்திருந்தது. ஜஹாங்கீர் ஆங்கிலேயத் தூதர்பால் கொண்ட

மனக்கனிவை உணர்ந்த இறைவி நூர்மஹா-லும் இளவரசர் குர்ரமும் வெறுப்பு அடைந்-தனர். எனவே அவர்கள் பெருமன்னர், ரோவின்பால் மேலும் பரிவு காட்டாதபடி சூழ்ச்சிகள் செய்தனர்.

நில உலகின் ஒரு மூலையில் இருக்கும் ஒரு சிறிய தீவின் மன்னரான ஜேம்ஸ் முகலாயப் பெருநாட்டின் பெருமன்னராம் தமக்குத் திருமுகம் எழுதித் தூதர்பால் கொடுத்தனுப்பத் தக்க பெருமை உடையவர் அல்லரென்று ஜஹாங்கீர் கருதினார். எனவே ரோ எளிதில் பெருமன்னருடன் தாம் நாடி வந்த வினையைப் பற்றி உரையாட இயலவில்லை.

ஸர் தாமஸ் ரோ ஜஹாங்கீருக்குச் செலுத்திய காணிக்கைகளில் ஒருவாளும், ஓர் இசைக் கருவியும், கோச் என்ற வகையைச் சேர்ந்த ஒரு வண்டியும் இருந்தன. இசை விருப்பமுள்ள பெருமன்னர் இசைக் கருவியை விரும்பி, அதை இசைக்குமாறு ரோவின் இசையாளரான [1]**தாமஸ் ஆர்ம்ஸ்ட்ராங்** என்றவருக்குக் கட்டளையிட்டார். அவரும் உடனே

1. Thomas Armstrong

அந்த அவையிலேயே அதை இசைத்துக் காட்டினர். அவ்விசையைக் கேட்டு அப்பெரு மன்னர் பெரிதும் மகிழ்ந்தார்.

எனினும் அம்மகிழ்ச்சியால் ரோவுக்கு ஒரு பயனும் ஏற்படவில்லை. அவர்மனம் சோர்வடைந்தது. வீட்டின் நினைவு அவர் நெஞ்சில் குடி கொண்டது. அவர் உடலும் நோய்வாய்ப் பட்டது. ஆயினும் அவர் உடற் சோர்வையும் உளச் சோர்வையும் ஒருவாறு செம்மை செய்து கொண்டு, காலமும் இடமும் கருதி இருந்தனர். சில நாட்கள் கழிந்தபின்னர், ஒருநாள் அவர் பெருமன்னரின் அவைக்குச் சென்றனர். அவரைக்கண்ட ஜஹாங்கீர் அவரைத் தம் அருகில் வந்தமருமாறு அழைத்தனர். அதற்கிணங்கி ரோ அவரருகில் நெருங்கி, தாம் உடன் கொண்டு சென்ற கடிகாரத்தை அவருக்குக் காணிக்கையாய் அளித்தனர். அதைப் பெற்றுக் கொண்ட பெருமன்னர் மகிழ்ச்சி அடைந்தார்.

கடிகாரம் போன்ற நுண்ணிய காலக்கருவிகள் அக்காலத்தில் இங்கு செய்யப்படவில்லை. அக்காலத்து இந்து மக்கள் பசி, பிணி, பகை.

இன்றி வாழ்தலே மானிட முயற்சியின் முடிவு என்று கருதினர் போலும். அவர்கள் இயற்கையில் காணப்படும் பலவகைப்பட்ட பொருள்களின் இயல்புகளையும், மாற்றங்களையும், பயன்களையும் ஆராய்ந்து அறியமுயலாமலும், இயற்கையில் காணப்படும் ஆற்றல்களின் தன்மைகளையும், மாறுபாடுகளையும் நுணுகி ஆராய்ந்து அறிய முயலாமலும் இருந்தனர். ஆயின், மேனாட்டு மக்கள் அத்துறைகளில் எல்லாம் அறிவைச் செலுத்தி, பல உண்மைகளையும், பொருள்களையும், முறைகளையும் அறிந்து, அவற்றால் மானிட வாழ்க்கையைச் சிறப்பித்துக்கொள்ள முயன்றனர். நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் எனவும், பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் எனவும் கூறப்படும் ஐந்து பெரும் பொருள்களைப் பற்றிய பல உண்மைகளை அறிவாலும், ஆராய்ச்சியாலும், அநுபவத்தாலும் கண்டறிந்து, அவ்வறிவால் மானிட வாழ்வுக்குப் பற்பல நலன்களையும் இன்பங்களையும் தந்த பெருமை மேனாட்டு அறிஞர்களுக்கு உரியதாகும்.

ஆயின், பொதுவாகக் கீழ் நாட்டவரும், குறிப்பாக இந்திய மக்களும், அடக்கம், அன்பு முதலிய பண்புகளையே சிறந்தனவாய்க் கருதி, அவற்றைப் பெறும் முயற்சிகளில் ஈடுபட்டிருந்தனர். இம்மையில் இன்பம் இலதேனும் மறுமையிலேனும் இன்பம் பெற வழி தேடுதல் வேண்டும் என்ற கருத்தைக் கொண்ட அவர்கள் வாழ்க்கையில் நேரும் துன்பங்களை வினையால் நேர்ந்தன எனக்கருதி, அத்துன்பங்களைத் துடைத்து, இன்பத்தைத் தேட விரும்பினர் அல்லர். வாழ்க்கையில் நேரும் துன்பங்களை ஒழித்தலும், இன்பங்களைத் தேடுதலும் மனிதன் உறுதியாகச் செய்யத்தக்க முயற்சிகளே என அக்காலத்துக் கீழ் நாட்டவர் கருதியிருப்பின், கூரிய அறிவின் 'திறம் படைத்த அவர் மேனாட்டாரைப் போலவே அறிவியல் உண்மைகளையும், கருவிகளையும், முறைகளையும் கண்டு பிடித்திருக்கக் கூடும்.

ஆழ்ந்து எண்ணிப் பார்ப்பார்க்கு மேனாட்டார் மானிட வாழ்வைத் துன்பமற்றதாய்ச் செய்து கொள்ள வேண்டும் எனவும் செய்து கொள்ளக்கூடும் எனவும் கொண்ட கருத்துக்-

களும், கீழ்நாட்டார் அன்பும் அடக்கமும் மானிட வாழ்க்கையின் சிறந்த பண்புகளாம் எனக்கொண்ட கருத்தும் ஏற்றனவே என்பது புலப்படும். ஒரு நாட்டு மக்கள் தம் நாட்டு வாழ்வைச் சிறப்புடையதாய்ச் செய்து கொள்ள விரும்பின், இவ்விரு வகைக் கருத்துக்களையும் அடிப்படையாய்க் கொண்டு முயலுதல் வேண்டும். அவ்வாறு முயல்வதால் சிறக்கும் அந்நாட்டு வாழ்வு நறுமணம் சேர்ந்த பொன்மலர் போல் விளங்கும். ஸர் தாமஸ் ரோ காணிக்கையாய்த் தந்த கடிகாரத்தைப் பெற்றுக்கொண்ட ஜஹாங்கீர் பெருமன்னர் அவ்வளவில் மகிழ்ச்சியடைந்தாரே அன்றி, அத்தகைய பொருளைத் தாமும் தம் நாட்டில் செய்விக்க வேண்டுமென்ற எண்ணத்தைக் கொண்டார் அல்லர். அந்தக் கடிகாரத்தின் நுண்ணிய பொறியிலிருந்து ஒரு காலத்தில் கீழ்த்திசை நாடுகள் அனைத்தையும் அடக்கத் தக்க பெரும் படைப் பொறிகள் உண்டாகும் என்று அவர் கனவிலும் கருதவில்லை. அவ்வளவில் மகிழ்ந்த ஜஹாங்கீர் ரோவை நோக்கி, அவர் அங்குவந்த நோக்கத்தைக் கூறுமாறு கட்டளையிட்டார்.

காலமும் இடமும் கருதியிருந்த ரோவுக்கு அந்த வாய்ப்பு நேர்ந்தவுடன் ஆர்வத்தின் முனைப்பு முற்பட்டது. அவர் சூரத் நகரில் வாணிபம் செய்து வந்த ஆங்கிலேயர்கள் அடிக்கடிக் கொள்ளையிடப்பட்டார்கள் என்றும், அவர்களைப் பிறர் பலவாறு அவமதித்தார்கள் என்றும், மேலும் பல குற்றங்களையும், குறைகளையும், சொல் திறனோடு அடுக்கி எடுத்துச் சொன்னார். அதுகேட்ட பெருமன்னர் உடனே தக்க கட்டளைகளைப் பிறப்பித்தார்.

அந்நிகழ்ச்சியின் பின்னர், ரோ தன்னாட்டவரின் வாணிபத்தை இந்நாட்டில் அழுந்திய முறையில் ஒழுங்கு படுத்தவேண்டிய வேலைகளை எல்லாம் செய்தனர். ஏறக்குறைய மூன்றாண்டுகளாய் அவர் முகலாய அரசியலாருடன் வாணிபக் கழகத்தாருக்கு வேண்டிய உரிமைகளைப் பெறத்தக்க முயற்சிகள் செய்தனர். பட்டத் திறைவியான நூர்மஹாலின் உடன் பிறந்தவரான [1] **அஸாப் கான்** என்றவருடன் அவர் நேராய் உரையாடி ஏற்பாடுகள் செய்து வந்தார். முகலாய அரசியலார்

1. Asaf Khan

அவ்வப்போது புலப்படுத்திய முரட்டு மனப்-பான்மைகளுக்கும், அச்சுறுத்தல்களுக்கும் ரோ அஞ்சாமல், தம் மதிப்பும் தம் நாட்டு மதிப்-பும் சிறக்குமாறு நடந்து கொண்டார். அன்றி-யும் தமக்கு ஜஹாங்கீர் பெருமன்னரோடு உண்டான நட்புத் தொடர்பை வாய்ப்பறிந்து பயன்படுத்திக் கொண்டார். மூன்றாண்டின் முயற்சிகளின் முடிவில் அவர் ஒருவாறு தாம் மேற்கொண்டு வந்த வினையில் வெற்றி பெற்-றார். ஜஹாங்கீர் பெருமன்னர் சூரத் நகரில் கிழக்கிந்திய வாணிபக் கழகத்தார் தடையற்ற வாணிபம் செய்யலாம் என்று ஒரு வெளிப்-படையான அறிக்கையைப் பிறப்பித்தார். அதன்படி ஆங்கிலேயருக்குத் தடையற்ற வாணிப உரிமையும், படைக் கருவி தாங்கும் உரிமையும், தம்மைத்தாமே ஆண்டு கொள்ளும் உரிமையும், நகரில் தங்கி வசிக்கும் உரிமையும் அளிக்கப்பட்டன. அந்த உரிமைகளே நாளடைவில் முகலாய ஆட்சியின் வீழ்ச்சிக்-கும், வாணிபம் செய்ய வந்த ஆங்கிலேயரின் ஆட்சியின் தோற்றத்திற்கும் அடிகோலியன.

## * ராபெர்ட் க்ளைவ்

பிறப்பும் இறப்பும் மாந்தர் விருப்பத்தின் எல்லையைக் கடந்தன. இவ்விரண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில், இளமையும், மூப்பும், உறக்கமும் கழிய நின்றகாலமே ஒருவனுடைய அறிவு, விருப்பம், செயல் என்ற மூன்றும் தொழிற்படும் நிலைக்களனும். அந்தத் தொழிற்பாடும் அதன் விளைவுகளுமே மானிடவாழ்வு எனப்படும். அவ்வாழ்வை ஒருவன் பிறர்க்குக் கெடுதி செய்யாமலும், தன்னலம் ஒன்றே கருதாமலும், பலர்க்குப் பெரு நன்மை தருமாறும் நடத்த விரும்புதல் அறிவுடைமையாகும். அத்தகைய விருப்பத்தையே புகழ் விருப்பம் என்று அறிஞர் கூறுவர்.

**ஒன்றா வுலகத் துயர்ந்தபுக ழல்லால்**
**பொன்றாது நிற்பதொன் றில்.**

என்ற குறளின் உட்கருத்து ஈண்டு நன்கு அறியத்தக்கது. உலகத்தில் எளிதில் அழியாமல் நிற்கத்தக்க புகழை அறிவுடைய ஒருவன்

* Robert Clive.

N46



பெற முயலுதல் வேண்டும். அப்புகழ் ஒருவனால் எளிதில் பெறப்படுவதன்று: செயற்கரிய செய்தே அதனைப் பெறுதல் கூடும். இக்கருத்தையே

**செயற்கரிய செய்வார் பெரியர்; சிறியர்**
**செயற்கரிய செய்கலா தார்.**

என்ற **குறளில்** வள்ளுவர் வலியுறுத்தியிருக்கின்றார்.

புகழ் தரத் தக்க அரிய செய்கைகள் புகழ் விரும்பும் ஒருவன் அறிவுக்கும் விருப்பத்துக்கும் ஏற்றவாறு பலவகைப்படும். ஒரு சிலர் அரிய நூல்கள் இயற்றிப் புகழ் பெற விரும்புவர்; ஒரு சிலர் அரிய அறிவியல் உண்மைகளைக் கண்டு பிடித்துப் புகழ் பெற விரும்புவர்; ஒரு சிலர் தம் நாட்டின் நலத்தைச் சிறப்பிக்க அருஞ்செயல் புரிந்து, புகழ் பெற விரும்புவர். இந்த இறுதி வகையைச் சேர்ந்தவரில் ஒருவர் **ராபெர்ட் க்ளைவ்.**

க்ளைவ் இங்கிலாந்தில் [1]**ஷிராப்ஷயர்** மாகாணத்தில், [2]**மோர்டன்சே** என்ற ஊரில் பிறந்தவர். இளமையில் அவர் கொடூர குணமும், வம்பு செய்யும் மனப்பான்மையும் பெற்றவரா-

1. **Shrofshire.** 2. **Mordensay.**

TAMIL NADU ARCHIVES LIBRARY No.

யிருந்தன ரென்றும், படிப்பில் கருத்தைச் செலுத்தாமல், பள்ளிச் சிறுர்களைச் சேர்த்துக் கொண்டு, முரட்டுத் தனமான செய்கைகளைச் செய்தாரென்றும், அதனுல் வெறுப்புமேலிட்ட அவருடைய தந்தை, அவரை இங்கிலாந்தை விட்டு வெளியேற்ற வேண்டுமென்று தீர் மானித்து, இந்தியாவில் இருந்த கிழக்கிந்திய வாணிபக் கழகத்துக்குக் **கணக்கர்** வேலை செய்யு மாறு அனுப்பி விட்டாரென்றும் தெரிகின்-றது. அப்போது அவர் வயது பத்தொன்பது.

பிற்றைய நாளில் அருஞ் செயல் செய்து, இப் பரத நாட்டில் ஆங்கில ஆட்சிக்கு அடி கோலிய ராபெர்ட் க்ளைவின் இளமை, எதிர் காலத்தின் விளைவுக்கு ஒரு வித்தாய் விளங்க-வில்லை. உலகத்தில் அருஞ் செயல்கள் செய்த பல தீரர்களின் இளமைப் பருவங்களை ஆராய்ந்து பார்க்குங்கால், அவை மூவேறு வகையாய் இருந்தன என்னும் உண்மை புலப்-படும். ஒரு சிலரின் இளமை அவர்களின் பிற்-கால அருஞ் செயல்களை யானை ஓசையாய்க்-காட்டுவனவாய் இருக்கும்; வேறு சிலரின் இளமை யாதொரு சிறப்பும் தோன்ருமல்

பொதுப்பட இருக்கும்; மற்றுஞ் சிலரின் இளமை அவர்களின் பிற்காலச் சிறப்புக்கு முரண்பட்டதாய்த் தோன்றும். க்ளைவின் இளமை இறுதியில் காட்டிய வகையைச் சேர்ந்தது. பிற்காலத்தில் அவர் அருஞ் செயல் செய்து சிறப்புடன் விளங்குவர் என்று அவரை இளமையில் அறிந்தவர் எவரும் கூறுனர் அல்லர்.

இந்தியாவுக்குப் புறப்பட்ட க்ளைவ் ஓர் ஆண்டு கழித்து 1744-ஆம் ஆண்டில் ஜூன் திங்களின் முதல் நாள் சென்னை வந்து சேர்ந்தார். சென்னை வாழ்க்கை அவருக்குப் பெரும் துன்பமாய் இருந்தது. ஓரிடத்து அமர்ந்து ஓயாமல் கணக்கர் வேலையைச் செய்வது அவருக்கு மிகவும் வெறுப்பைத் தந்தது. இயற்கையாகவே எப்பொருளைப் பற்றியும் விரைவில் துணிவு கொள்ளும் பழக்க முடைய அவர் இந்திய வாழ்க்கையில் வெறுப்புகொண்டு, தற்கொலை செய்து கொள்ளத் துணிந்து, இருமுறை துப்பாக்கியால் சுட்டுக் கொண்டார். இரண்டு முறையிலும் குறி தவறிவிட்டது. எனவே அவர் ஓர் அரும்பெருஞ் செயல் செய-

தற்கெனவே ஊழ் தம்மை உயிரோடு விட்டிருத்தல் கூடும் என்று எண்ணி, தம் வேலையில் நாட்டமாய் இருந்தனர். தம் வாழ்க்கையில் ஏற்பட்ட இந்த நிகழ்ச்சியால் க்ளைவ் தம் வாழ்க்கையின் குறிக்கோளையே உயர்ந்த திறத்ததாய் மாற்றிக் கொண்டனர். தீயநெறியிலேயே இளமைப் பருவத்தைக் கழித்த அவர் இந்தநிகழ்ச்சியின் பிறகு வாழ்க்கையின் தன்மையைப் பற்றியும், நோக்கத்தைப் பற்றியும் கருதலாயினர். அறிவுடைய ஒருவன் செய்யத்தக்கது புகழைத் தேடுதலாம் என்ற உண்மையை அவர் அறியத் தலைப்பட்டார். அத்தகைய புகழைத் தாம் விரும்பிய துறையில் காலமும் இடமும் அறிந்து பெற வேண்டுமென்று அவர் உறுதி செய்து கொண்டனர். அவ்வுறுதிக்குத் துணை செய்வதுபோல் ஒரு நிகழ்ச்சி அக்காலத்தில் இந்த நாட்டில் நிகழ்ந்தது.

இங்கிலாந்துக்கும் பிரான்ஸ் நாட்டுக்கும் அக்காலத்தில் அடிக்கடி பகை ஏற்பட்டது. க்ளைவ் சென்னையில் வந்து தங்கிய சிறிது காலத்துக்குள் ஆங்கிலேயருக்கும் பிரான்ஸ்

நாட்டவருக்கும் ஒரு பூசல் விளைந்தது. அதனால் இந்தியாவில் இருந்த பிரான்ஸின் வினைஞரான [1] டூப்ளே சென்னையிலிருந்த ஆங்கிலேயருடைய [2]செய்ண்ட் ஜார்ஜ் கோட்டையைக் கைப்பற்றிக் கொண்டு, ஆங்கிலேயர்களைச் சிறைப் படுத்தினர். அந்த ஆங்கிலேயர்களில் ஒருவர் க்ளைவ். அவர் நெடுநாள் சிறையில் கிடக்காமல், உருமாற்றம் பூண்டுத் தப்பிச் சென்று, கடலூரிலிருந்த [3] செயிண்ட் டேவிட் கோட்டையைச் சேர்ந்தார். ஆங்கு அவர் கணக்கர் வேலையை விட்டு, வாணிபக் கழகத்தாரின் படைக்கு ஒரு சிறு படைத்தலைவரானர். அதன் பிறகு, சிறிது காலத்துக்குள், ஆங்கிலேயருக்கும் பிரான்ஸ் நாட்டவருக்கும் நட்பு ஏற்பட்டபடியால், சென்னை மீண்டும் ஆங்கிலேயர் உடைமை ஆயிற்று.

க்ளைவ் இந்தியாவுக்கு வந்த காலத்தில் இந்த நாட்டில் ஆட்சி செய்து கொண்டிருந்த முகலாயரின் வன்மை பல வகையிலும் குறைந்து விட்டது. முகலாயப் பெருமன்னரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த பல பாகங்கள்

1. Deupleix. 2. Fort St. George.
3. Fort St. David.

பிரிந்து, சிறு சிறு மன்னர்களால் ஆளப்பட்டன. அந்த நிலைமையைப் பயன் படுத்தி, இந்நாட்டில் தம் நாட்டவருக்கு அரசியல் உரிமையை ஏற்படுத்த எண்ணி, முயலத் தலைப்பட்டவர்களில் முதல்வர் டூப்ளே. இந்தியப் படை வீரர்களை மேனாட்டுப் போர் முறைகளில் பழக்கி, அவர்களைக் கொண்டே இந்தியாவை அடக்கி ஆளவேண்டுமென்ற எண்ணம் டூப்ளேயின் உள்ளத்தில் தோன்றியது. அந்த எண்ணத்தைச் செயற்படுத்த அவர் தக்க வாய்ப்பை எதிர்பார்த்திருந்தனர். அவ்வாய்ப்பும் விரைவில் நேர்ந்தது.

கர்நாடகப் பகுதியின் மன்னரான [1]**அன்வார் உதீன் கான்** என்றவருக்கு இரு பகைவர் ஏற்பட்டனர். [2]**முசபர்ஜங்**, [3]**சந்தாசாஹிப்** என்ற அவர்கள் தாங்களே கர்நாடகத்தின் ஆட்சிக்கு உரியவர்களென்று, டூப்ளேயின் நட்பைப் பெற்று, அவருடைய படையின் உதவியை உடன் கொண்டு, அன்வாருதீன்கான் மீது போர் தொடங்கினார்கள். அப்போரில் கான் கொல்லப்பட்டார். அவருடைய மைந்தரான [4]**மஹமத்**

1. Anwar-ud-din.
2. Muzafar Jung.
3. Chanda Sahib.
4. Mahammad Ali.

அலி மிகுந்திருந்த சிறு படையுடன் திருச்சிராப்பள்ளிக்குச் சென்று ஒளிந்து கொண்டார். அவரைச் சந்தாசாஹிபின் படையும் டூப்ளேயின்படையும் துரத்திச்சென்று, திருச்சிராப்பள்ளிக் கோட்டையை வளைத்துக் கொண்டன. டூப்ளேயின் செல்வாக்கு கர்நாடகம் முழுதும் பரவத் தொடங்கிற்று. அது கண்ட ஆங்கிலேயர்கள் அச் செல்வாக்கை அழிக்க எண்ணினர். அந்த எண்ணத்துக்கு துணைசெய்வது போல மஹமத் அலி இழந்த தன் நாட்டைப் பெற, ஆங்கிலேயரின் உதவியை நாடினார். சந்தாசாஹிபின் படையையும் டூப்ளேயின் படையையும் ஒரே காலத்தில் தாக்கி வெல்லத்தக்க படை ஆங்கிலேயர்களுக்கு இல்லை. எனவே அவர்கள் மகம்மத் அலிக்கு உதவி செய்யத் தயங்கினார்கள்.

அருஞ் செயல் செய்து தம் நாட்டின் பெருமைக்கு ஆக்கம் தேட விரும்பிய க்ளைவ் ஆங்கிலப் பெரும் படைத் தலைவரை நெருங்கி, மகம்மத் அலிக்கு உதவி செய்து வெற்றி பெறத் தக்க ஓர் வழியை எடுத்துக் கூறினார். சந்தா சாஹிபின் தலைநகரான ஆர்க்காட்டை

முற்றுகை செய்தால், அவருடைய படை திருச்சிராப்பள்ளியை விட்டு ஆர்க்காட்டுக்கு வந்துவிடு மென்றும், அப்பொழுது டூப்ளேயின் படையை அழித்து, மகம்மத் அலியை எளிதில் காப்பாற்றக் கூடுமென்றும், பிறகு ஆர்க்காட்டுக்குச் சென்று, சந்தா சாஹிபையும் வெல்லக்கூடுமென்றும் க்ளைவ் கூறினர். ஆங்கிலப் படைத்தலைவருக்கோ க்ளைவ் காட்டிய வழி வெற்றி தருமென்று தோன்றவில்லை. எனினும் க்ளைவ் காட்டிய ஆர்வத்தினுல் கட்டுண்ட அவர் க்ளைவையே ஒரு சிறு படைக்குத் தலைவராக்கி ஆர்க்காட்டுக்கு அனுப்பினர். தக்க காவலின்றிக் கிடந்த ஆர்க்காட்டுக் கோட்டையைக் க்ளைவ் எளிதில் கைப்பற்றிக் கொண்டார். அச்செய்தியை அறிந்த சந்தா சாஹிப் ஒரு பெரும் படைப் பகுதியைத் தம் மைந்தரான [1]**ராஜா சாஹிபின்** தலைமையில் ஆர்க்காட்டுக்கு அனுப்பினர். ராஜா சாஹிபின் படை ஆர்க்காட்டுக் கோட்டையை முற்றுகை செய்தது. க்ளைவ் தம்முடைய திறமையாலும் ஆர்வத்தாலும் பகைவரின் தாக்குதலை அழித்து, அவர்களைத் துரத்தியும் சென்று, பெரும்

1. Rajah Sahib.

வெற்றி அடைந்தார். அதன் பின்னர், க்ளைவ் ஒருபடையுடன் சென்றுத் திருச்சிராப்பள்ளிக் கோட்டையை முற்றுகை செய்திருந்த சந்தா சாஹிபின் படையையும் டூப்ளேயின் படையையும் சூழ்ந்துகொண்டார். நடந்த போரில் க்ளைவ் வெற்றி பெற்றார். பின்னர் நடந்த சில சிறு போர்களில் க்ளைவ் பிரான்ஸ் நாட்டவர் படையை முறியடித்து, அந்நாட்டவரின் செல்வாக்கு இந்தியாவில் நிலைக்காதபடி செய்து விட்டார். பிறகு அவர் இங்கிலாந்துக்கு ஓய்வு எடுத்துக்கொள்ளச் சென்றார்.

வாணிப நோக்கம் ஒன்றையே கருதி இந் நாட்டுக்கு வந்த ஆங்கிலேயக் கிழக்கிந்திய வாணிபக் கழகத்தாரின் மனப்பான்மை, க்ளைவ் பெற்ற இந்த வெற்றியால் நாடு காணும் முயற்சியாய் முளைந்தது. தொடக்கத்தில் வாணிப வகையில் பிரான்ஸ் நாட்டவர் பெற்ற செல்வாக்கைக் குறைக்கக் கருதியே போர் முறையில் கருத்து செலுத்திய வாணிபக் கழ கத்தார், இந்நாட்டில் அக்காலத்தில் இருந்த முகலாய் ஆட்சியின் வீழ்ச்சியையும், பிற ஒற் றுமையற்ற சிறு மன்னர்களின் பூசல்களையும்

கண்டு, அவ்வாய்ப்பைப் பயன்படுத்தித் தம் நாட்டவரின் ஆட்சியை இந்நாட்டில் ஏற்படுத் தத் துணிந்தார்கள்.

ஓய்வு விரும்பித் தாய் நாட்டுக்குச் சென்ற க்ளைவை வாணிபக் கழகத்தார் பெருமை படுத் திப் பாராட்டினார்கள். அவரை ஜனரல் கிளைவ் என்று அழைத்து, அவருக்குக் கல் இழைத்த வாள் ஒன்றைத் தங்கள் பாராட்டின் அறிகுறி யாகவும் அளித்தனர். தீயோன் என்று தம்மைப் புறப்படுத்திய தாய் நாடே இப்பொழுது தக்கோர் எனப் பாராட்டியதைக் கண்டு க்ளைவ் அகம் மகிழ்ந்தார். அப்பாராட்டு அவரை மேலும் பல அருஞ்செயல் செய்தற்கு ஊக்கம் தரும் வழியாக இருந்தது. க்ளைவ் சில காலம் இங்கிலாந்தில் தங்கியிருந்து, உற்றார் உறவி னரை மகிழ்வித்துப் பின்னர் 1754-ஆம் ஆண் டில் [1]லெப்டினென்ட் கர்னல் பதவியுடன் செயிண்ட் டேவிட் கோட்டையின் [2]ஆளராய் இந்தியாவுக்கு மீண்டார்.

க்ளைவ் இந்தியாவைச் சேர்ந்த சிறிது காலத்துக்குள் அவருடைய அருஞ் செயலுக்-

1. Lieutenant Colonel. 2. Governor.

கும் பெரும் திறலுக்கும் இடம் தரத்தக்க ஒரு நிகழ்ச்சி இந்நாட்டில் நேரிட்டது. முகலாயப் பெரு மன்னருக்கு அடக்கமாயிருந்த வங்காள மாகாணத்தின் ஆட்சித் தலைவரான [1]**சுராஜ் உத் தௌலா** என்றவர் ஆங்கிலேயர் மேல், பிற நாட்டவர் என்ற கருத்தால், கொண்ட பகையுடன், அவர்களை இந்தியாவை விட்டு அகற்ற வேண்டுமென்று எண்ணி, கல்கத்தா பட்டினத்தில் இருந்த வாணிபக் கழகத்தாரின் உறைவிடத்தைத் தாக்கித் தீக்கு இரையாக்கினர். அன்றியும் [2]**வில்லியம் கோட்டை**யைக் கைப் பற்றிச் சில ஆங்கிலேயரைச் சிறைப்படுத்தித் துன்புறுத்தினர். அதை அறிந்த சென்னையிலிருந்த வாணிபக் கழகத்தார் கல்கத்தாவை மீண்டும் கைப்பற்ற ஒரு படையை அனுப்பத் தீர்மானித்தனர். க்ளைவே அப்படைக்குத் தலைவராய்ச் சென்றார். 900 ஆங்கிலக் காற்படை வீரர்களும், 1500 இந்தியக் காற்படை வீரர்களும் சென்னையில் புறப்பட்டு, நாவாய் வழியாய்க் கல்கத்தாப் பட்டினத்தைச் சேர்ந்தார்கள். உடனே காலத்தை வீணாக்காமல் க்ளைவ் [3]பட்ஜ் பட்ஜ் என்ற பட்டணத்தையும்,

---

1. Suraj-ud-daula. 2. Fort St. William. 3. Budge-Budge.

வில்லியம் கோட்டையையும் கைப்பற்றிக் கொண்டனர். மேலும் விரைந்து ஹூக்ளி நகரத்தின் மேல் படை எடுத்துச் சென்று, அதையும் பாழாக்கினர். க்ளைவின் ஆற்றலை-யும், விரைந்து வினை செய்யும் முறையை-யும் கண்ட சுராஜ்உத்தௌலா ஆங்கி-லப் படையுடன் நட்பு செய்து கொள்ள முன் வந்தார். க்ளைவ் அவருடைய விருப் பத்திற்கு இணங்க மனமற்றவராயிருந்-தார். வாய்ப்பு நேர்ந்தபோது, தம் நாட்டவரின் ஆட்சியை இந்நாட்டில் மேலும் ஊன்றவேண்-டும் என்ற எண்ணமுடைய அவர் வங்காள முக-லாயத் தலைவரை அறவே அழிக்க விரும்பினார். எனினும் வாணிபக் கழகத்தின் இயக்குநர்-கள் தங்களுக்கு ஏற்பட்ட சிதைவைச் சுராஜ் உத்தௌலா ஈடு செய்வதாயின், அவருடன் நட்பு செய்து கொள்ளுவதே தகுதியென்று கருதினர். அந்த வேளையில் ஐரோப்பாவில் ஆங்கிலேயருக்கும் பிரான்ஸ் நாட்டவருக்கும் மீண்டும் பகைமை மூண்டது. ஆதலான் இந்-தியாவிலிருந்த பிரான்ஸ் நாட்டுப்படை தங்க-ளுடைய சென்னைக் கோட்டையைத் தாக்குதல்

கூடும் என்று எண்ணிச் சென்னைக்குத் தக்க காவல் வேண்டுமென்று விரும்பி, கல்கத்தா-வுக்குச் சென்றிருந்த ஆங்கிலப் படையை வாணிபக் கழகத்தார் சென்னைக்கு விரைந்து வருமாறு கட்டளையிட்டனர். அதனால் க்ளைவ் தம் விருப்பத்திற்கு மாறாய் சுராஜ் உத்தௌலா வுடன் உடன்படிக்கை செய்துகொண்டுச் சென்னைக்கு மீண்டார்.

சுராஜ் உத்தௌலாவுக்கு ஆங்கிலேயர் மேல் உண்டான பகை தீராப்பகையாய் முடிந்-தது. அவர் தாம் க்ளைவுடன் செய்துகொண்ட உடன்படிக்கையை மீறி ஆங்கிலேயர்களுக்குச் சிற்சில இன்னல்களை விளைத்தார். எனவே க்ளைவுக்கு அவர் மேல் முன்னரே ஏற்பட்டி-ருந்த வெறுப்பு பெரிதாயிற்று. எவ்வாறேனும் அவ் வங்காளத் தலைவரை அழிக்கவேண்டு-மென்று கருதிய க்ளைவ், மீர்ஜாபர் என்ற, நவா-பின் படைத்தலைவரின் உதவியை நாடினர்: மீர்ஜாபருக்கு நவாப் உரிமை தருவதாய் வாக்-களித்து, சுராஜ் உத்தௌலாவின் ஆட்சியில் உட்பகையைப் புகுத்திவிட்டார்.

**எட்பக வன்ன சிறமைத்தே ஆயினும்**
**உட்பகை புள்ளதாங் கேடு**

என்ற குறளின் கருத்து இங்கு ஆராய்தற்கு உரியது. தன்னலம் விரும்பிய மீர்ஜாபர் தம் மன்னரை ஒழிக்கத் தம்மால் இயன்ற படை உதவியைக் க்ளைவுக்கு அளிப்பதாய் வாக்களித்தார். அவர் உதவியில் நம்பிக்கை வைத்து, க்ளைவ் தம்படையுடன் [1]**மூர்ஷிதாபாத்** நோக்கிச் சென்றார். அதை அறிந்த நவாப் தம் படையுடன் ஆங்கிலேயப்படை வரும் வழியில் வந்து தங்கினர். [2]**பிளாஸி** என்ற இடத்தில் இரண்டு படைகளும் சந்தித்தன. தம்முடன் செய்து கொண்ட உடன்படிக்கையின்படி மீர்ஜாபர் நவாபைக் கைவிட்டுத் தம்படையுடன் வந்து கலந்துகொள்வார் என்று க்ளைவ் எதிர்பார்த்தார். ஆயினும் மீர்ஜாபர் அவ்வாறு கலந்து கொள்ளவில்லை. அவருடைய உள்ளத்தில் கடமை உணர்ச்சிக்கும், தன்னல விருப்பத்திற்கும் பெரும்போர் நடந்துகொண்டிருந்தது. அவர் தம் மன்னரின் பகைவருடன் கலந்துகொள்ளாமலும் தம் கடமையை முனைந்து

1. Murshidabad. 2. Plassey.

செய்யாமலும் தாம் கொண்ட விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்ள எண்ணினர். ஆதலான், அவர் குறித்த காலத்தில் க்ளைவுடன் சேராமல் வாளாயிருந்து விட்டார்.

மீர்ஜாபரின் இச் செய்கை இந்நாட்டு வரலாற்றில் நேர்ந்த பொறுப்பற்ற செயல்களில் முதல் தரமானது என்பர். இந்திய வரலாற்றின் போக்கை வழிமாறச் செய்த நிகழ்ச்சிகளில் இது மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். ஒரு நாட்டின் ஆட்சி சீர் குலையாமல் மாண்புடன் விளங்கவேண்டுமாயின், அவ் வாட்சியின் தலைவர் தம் வரம்புக்குள் உட்பகை நேராதபடி விழிப்புடன் இருத்தல் வேண்டும். புறப்பகையின் தோற்றமும் வளர்ச்சியும் பயனும் எளிதில் புலப்படுதல் போல, உட்பகையின் பிறப்பும் ஆக்கமும் புலப்படா. ஆதலான், எவ்வகையாலும் உட்பகை ஏற்படத்தக்க நிலை தோன்றாதவாறு, ஒரு நாட்டின் ஆட்சித் தலைவர் காவலுடன் இருத்தல் இன்றியமையாதது. உடன் பிறந்தே கொல்லும் நோய் போல், நாட்டாட்சியின் பல திறப்பட்ட கட்டுப்பாடுகளைச் சிறுகச் சிறுக அழிக்கும்

இயல்பையுடைய உட்பகை, ஆட்சித் தலைவர்களால் மிகவும் அச்சப்படத்தக்கது.

உட்பகையின் பரப்பும் ஆழமும் கொடுமையும் நிறைந்த ஆற்றலை அறிந்த பிற-நாட்டு ஆட்சித் தலைவர்கள் தாம் வெல்ல விரும்பும் ஒரு நாட்டின் வரம்புக்குள் உட்-பகையை ஊன்றுமாறு செய்வர். அவ்வாறு செய்தல் அவர் கருத்தின் வெற்றிக்கு இன்றி-யமையாத செய்கையாகும். ஆதலான் உட்-பகையைப் புகுத்தி மீர்ஜாபரின் நட்பைப் பெறக் க்ளைவ் செய்த முயற்சி ஆங்கிலக் கண் கொண்டு இந்திய வரலாற்றைக் கருதுவார்க்கு ஏற்புடைய அருஞ் செயலாகவே தோன்றும். அத்தகைய உட்பகைக்கு இடம் தந்த சுராஜ் உத்தெளலாவின் விழிப்பற்ற ஆட்சி 'இந்தி-யக் கண் கொண்டு இந்திய வரலாற்றைக் கருதுவார்க்குப் பொறுப்பற்றதே என்பது விளங்கும்.

மீர்ஜாபர் குறித்த வேளையில் உதவி செய்யாமல் கை விட்டதைக் கண்ட க்ளைவ் சற்று தயக்கமடைந்தார். முழுப்பொறுப்புடன் எப்போரிலும் முன்னேறிச் செல்லும் பழக்க-

முடைய அவர் இவ்வேளையில் தம் பொறுப்பில் பிறரையும் சேர்த்துக் கொள்ள விரும்பி, ஒரு சிறு போர் அவையைக் கூட்டினார். அவையினர் அனைவரும் மீர்ஜாபரின் உடன்பட்ட உதவியின்றிப்போர் தொடுத்தல் தவறென்றே கருதினர். ஆயினும், தம் உள்ளத்தில் சற்றும் மங்காமல் சுடர்விட்டு எரிந்து கொண்டிருந்த நாடு காணும் வேட்கையால், தூண்டப்பட்ட க்ளைவ் இடையூற்றின் எதிர்ப்பை மீறித் தம் நாட்டவரின் இந்திய ஆக்கத்திற்கு உரிய அருஞ் செயல் செய்ய முடிவில் துணிந்தார்.

ஆங்கிலப்படை அளவில் சிறியதாயிருந்தது. எழுநூறு ஆங்கிலக் காலாட் படைகளும், இரண்டாயிரம் இந்தியக் காலாட் படைகளும், பத்து பீரங்கிகளுமே கிளைவின் பலம். சுராஜ் உத்தௌலாவின் படை அளவில் பெரியதாயிருந்தது. அதில் பதினையாயிரம் பரிவீரர்களும் முப்பத்தையாயிரம் படைவீரர்களும் ஐம்பத்துமூன்று பீரங்கிகளும் இருந்தன. எனினும் க்ளைவ் மனவன்மையுடன் மேற்சென்றார். **பிளாசி** என்ற இடத்தில் இருபடைகளும் எதிர்த்துப் போரிட்டன. க்ளைவ் தம்

படையின் சிறுமையை மாற்ரூர் அறியாதபடி ஒரு மாந்தோப்பின் மறைவில் அணிவகுத்தார். நவாபின் படை அகன்ற வெளியில் ஆங்கிலப் பீரங்கிகளுக்கு இலக்காய் நிறுத்தப் பட்டிருந்தன. மிர்ஜாபரின் நேர்த்தலைமையில் இருந்த படை நவாப் படையின் பின்னணிகளில் நிறுத்தப் பட்டிருந்தது. க்ளைவ் திறமையுடனும், உணர்ச்சியுடனும், தம் கட்சியில் மிகுந்த சிதைவு ஏற்படாதபடியும், பகைவருக்குப் பெருஞ் சிதைவு ஏற்படும்படியும் போர் செய்தார். போர் முறைகளில் ஆங்கிலேயப் படைத் தலைவர்களால் பழக்கப்பட்ட க்ளைவின் இந்தியப்படை அளவில் குறைந்திருந்தும், தக்க முறையில் அழகாய்ப் பகைவரின் பெரும்படையைச் சிதற அடித்தது. நவாபின் முன்னணிப் படை சிதறுண்டு ஓடும் தருவாயில், மீர்ஜாபர் தம் படையையும் ஓடுமாறு கட்டளையிட்டுவிட்டார். விரும்பிய வெற்றி க்ளைவுக்குக் கிடைத்தது.

மீர்ஜாபர் செய்யாமற் செய்த உதவியைக் க்ளைவ் பாராட்டி, அவரை வங்காளம் முதலிய மாகாணங்களுக்கு நவாபாக ஆக்கினர். புற-

முதுகிட்டு ஓடிய சுராஜ்உத்தெளலா உரம் ஒடுங்கி, அச்சம் மேலிட்டு, நாடு கடந்து ஓடிவிட்டார். மீர்ஜாபர் கிழக்கிந்திய வாணிபக் கழகத்தாருக்குப் பெருந் தொகையையும் சில நிலப் பகுதிகளையும் பரிசிலாக வழங்கினர். மேலும் கழகத்தார் விரும்பியபடி, அவர்கட்குத் தடையற்ற வாணிப உரிமைகளும் தரப்பட்டன. மீர்ஜாபர் க்ளைவுக்கும் பெருந் தொகை பரிசிலாக அளித்தார் என்று தெரிகிறது. கழகத்தாரும் க்ளைவைப் பாராட்டிச் சில பரிசில்கள் அளித்து, வங்காள மாகாணத்தின் ஆளராக அவரை அமர்த்தினர்கள்.

அக்காலத்தில் டில்லி நகரில் பெயரளவில் முகலாய மன்னராய் இருந்தவர் [1]**இரண்டாம் அலாம்கீர்** என்றவர். அவருடைய அமைச்சரான [2]**காஸி உதீன்** என்றவர் பெருமன்னரைச் சூழ்ச்சியால் சிறைப்படுத்திவிட்டுத் தாமே பெருமன்னரானர். அலாம் கிரின் மைந்தரான [3]**ஷா ஆலம்** என்றவர் சிறையிலிருந்துத் தப்பிச் சென்றுச் சில சிற்றரசர்களைத் துணை சேர்த்துக்கொண்டு, மீர்ஜாபர் மேல் போர்-

1. Alamgir. II. 2. Kazi-ud-din. 3. Sha Alam

தொடுக்க முனைந்தார். அது கண்ட மீர்ஜாபர் அவருக்குப் பெருந்தொகையைக் கைப்பொருளாய்க் கொடுத்து, நட்புசெய்து கொள்ளக் கருதினர். அஃதறிந்த க்ளைவ் மீர்ஜாபரை அவ்வாறு செய்யாமல் தடுத்து, ஷா ஆலம் செலுத்திய படையுடன் போரிட்டு வென்று, மீர்ஜாபரின் வங்காள ஆட்சியை நிலை நிறுத்தினர்.

இச் செயலால் ஆங்கிலேயரின் பலம் இந்நாட்டில் பெருகிற்று. அவர்களுடைய உதவியைப் பெற்ற உள் நாட்டு மன்னர்களே தலையெடுக்கக் கூடுமென்றும், அவர்களோடு பகைத்துக் கொள்ளும் உள் நாட்டு மன்னர்கள் அழிக்கப்படுவார்களென்றும் அனைவரும் அறிந்துகொண்டனர். மீர்ஜாபர் உள்ளத்திலும் அச்சம் ஏற்பட்டது. எக்காரணத்தாலேனும் ஒருகால் தம்மையும் ஆங்கிலேயர்கள் அழித்து விடுவார்கள் என்று மீர்ஜாபர் அஞ்சினர். எனவே, தம்மை ஆங்கிலேயரின் உதவியை எதிர்பாராத முறையில், வன்மை செய்து கொள்ள விரும்பினர். அப்பொழுது கீழ்க்கடலை ஒட்டிய நாடுகளில் டச் நாட்டவரின்

ஆற்றல் பரவி இருந்தது. அவர்களைத் தம் துணைவர்களாய்க் கொள்ள மீர்ஜாபர் விரும்பினர். உடனே காலம் கடத்தாமல், அவர் டச் நாட்டவரைத் தூண்டி, வங்காளத்தில் தங்கியிருந்த ஆங்கிலப் படை மேல் போருக்கு வருமாறு செய்தனர். டச் கப்பல்படை ஹூக்ளி ஆற்றின் கரையை வந்து சேர்ந்தபோது ஆங்கிலப் படையின் பெரும்பாகம் அவ்விடத்தில் இல்லை. எனினும் க்ளைவ் தம் உதவிப் படைத்தலைவரைக் கொண்டு டச் கப்பல் படையை வளைத்துப் போர் செய்து, வென்றனர். அன்றியும் க்ளைவ் டச் நாட்டவரின் நாட்டம் இந் நாட்டில் என்றும் ஏற்படாதவாறு அருஞ்செயல் பல செய்ததோடு அமையாமல், பிரான்ஸின் செங்கோலும் இங்கு ஊன்ருதபடி செய்தார்.

சில நாள் கழித்து, க்ளைவ் இரண்டாம் முறை தம் தாய் நாட்டுக்குச் சென்றார். ஆங்கு அவர் தமக்குக் கிடைத்த, பெரும் பொருளால் பலர்க்கும் பல நன்மைகளைச் செய்து, 1761-ஆம் ஆண்டில் நடந்த பொதுத் தேர்தலில் [1]பொது

1. Parliament.

**மன்றத்தின்** ஓர் உறுப்பினராய்த் தேர்ந்தெடுக்கப்பட்டார். பொது மக்களால் இவ்வாறு உயர்ந்த முறையில் பெருமிதமாய்ப் பாராட்டப்பட்ட க்ளைவை ஆங்கில அரசியலாரும் ஒரு [1]**பெருமகனுக்கிப்** பாராட்டினர். 1764-ஆம் ஆண்டில், க்ளைவ் கிழக்கிந்திய வாணிபக் கழகத்தாரின் கல்கத்தாக் கிளைச் சங்கத்திற்குத் தலைவராய் அமர்த்தப்பட்டு, மூன்றும் முறையாய் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டார். க்ளைவ் இரண்டாம் முறை இங்கிலாந்துக்குச் சென்றிருந்த காலத்தில் இந்தியாவில் பல குழப்பங்கள் ஏற்பட்டன. வங்காளத்தின் ஆட்சி சீர் கேடடைந்தது; வாணிபக் கழகத்தாரின் கணக்கர்கள் தன்னல மனப் பான்மையுடன் தமக்கெனப் பொருள் சேர்த்துக்கொள்ளத் தலைப்பட்டார்கள்; மீர்ஜாபர் பதவியிலிருந்து விலக்கப்பட்டு, அவரிடத்தில் அவருடைய மருகரான [2]**மீர்காஸிம்** என்றவர் அமர்த்தப்பட்டார்; இந்திய வணிகர்கள் தோன்றி, ஆங்கிலக் கொடியைப்பயன்படுத்திக் கொண்டு, வங்காள எல்லைக்குள் வாணிபம் செய்யத் தொடங்கினர்கள்;

1. Lord. 2. Mir Kasim.

அதனால் வாணிபக் கழகத்தார்க்கும் இந்தியச்செல்வர்களுக்கும் பூசல் ஏற்பட்டது; அதன் பயனாய் மீர்காசிம் பதவியிலிருந்து விலக்கப்பட்டு, மீண்டும் மீர்ஜாபர் நவாபாய் அமர்த்தப்பட்டார்; வங்காள மக்கள் தம் மன்னரின் பலம் இன்மையாலும், வாணிபக் கழகத்தாரின் தன்னல நோக்கங்கொண்ட கணக்கர்களாலும், பலவகையான இன்னல்களுக்கு ஆளானார்கள்; அதனால் அவர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் அடிக்கடி வம்புகள் நேர்ந்தன. இக்குழப்பத்தைச் சீர் செய்யவே க்ளைவ் மூன்றாம் முறை இந்தியாவுக்கு அனுப்பப்பட்டார்.

1765-ஆம் ஆண்டு, மே திங்களில், க்ளைவ் கல்கத்தா துறைமுகத்தை வந்து சேர்ந்தார். உடனே சிறிதும் காலம் கடத்தாமல் வாணிபக்கழகத்தாரின் குற்றங்கள் அனைத்தையும் ஒழுங்குபடுத்தும் முறைகளைக் கையாண்டு, அமைதியும் ஆக்கமும் ஏற்படுமாறு செய்தார். பின்னர் 1767-ஆம் ஆண்டில், ஜனவரி திங்களின் இறுதியில், அவர் இந்தியாவை விட்டுத் தம் தாய்நாட்டிற்கு முடிவாய்ச் சென்றார்.

வாணிப மனப்பான்மையோடு, கடல் கடந்து, பல இன்னல்களையும் வென்று, இந்-

நாட்டில் கால்வைத்த ஆங்கிலேயரின் பெருமை **ரால்ப் பிட்ச்** என்ற இலண்டன் பட்டினத்துத்தீர வணிகரால் ஓர் அளவு உயர்த்தப்பட்டுப் பின்னர், **ஸர் தாமஸ் ரோ** என்ற, தாய் நாட்டின்மேல் பேரார்வம் படைத்த ஆங்கிலத் தூதரால், மேலும் ஓர் அளவு உயர்த்தப்பட்டுப் பிறகு, **ராபேர்ட் க்ளைவ்** என்ற அஞ்சா நெஞ்சு படைத்த ஆண்மையாளரால் நாடுகாணும் பெருமுயற்சியாய் மாறி, இந்திய மண்மேல் உறுதி அடைந்தது. அவ்வுறுதியின் உரம் அனைவர்க்கும் ஓர் எடுத்துக்காட்டாயும் விழிப்பினைத் தரும் பண்பாயும் இன்றும் விளங்குகின்றது.

---

## * மங்கோ பார்க்

உலகத்தின் பல பாகங்களில் வாழும் மக்கள் அனைவரும் ஒரே படித்தானவர் அல்லர். நாடுகளின் இயற்கை அமைப்புக்கும், பருவ காலங்களின் வன்மைக்கும், இயற்கை ஆற்றல்களின் தன்மைக்கும் இயைந்தவாறு நாட்டு மக்களின் வாழ்வு எளிதாகவேனும், அரிதாகவேனும் நேர்கின்றது. அகன்ற பாலை வனங்களும், பனி நிறைந்த உயர்ந்த மலை-களும், கடந்தற்கு ஆகாதபடி மிகக் குளிர்ந்த நீர்ப் பிரிவுகளும், அளவுக்கு மிஞ்சிய வரட்-சியும் மழையும் தரக்கூடிய பருவ காலங்களும், வரண்ட நில வளமும், தம்மைச் சூழவாழும் மக்கள் தம் வாழ்வின் பெரும் பகுதியைத் துன்ப நுகர்ச்சியில் கழிப்பரே அன்றி, இன்-பத்துடன் கழிப்பவர் ஆகார். அவ்வாறின்றி, வளம் பொருந்திய ஆறுகளும், வளம் நிறைந்த கழனிகளும், சிறந்த பருவகாலங்களும், விளை பொருள் மல்கிய மலைச்சாரல்களும் காடுகளும், தம்மைச் சூழவாழும் மக்கள் தம் வேட்கைகளை

* Mungo Park.

எளிதில் ஆற்றிக்கொள்ளும் வாய்ப்புடன் மகிழ்ச்சி பெற்றே வாழ்வர்.

உலக நாடுகளை மேற்கூறிய வகைப்படி வகுத்து நோக்கின், மேற்றிசை நாடுகள் இயற்கையின் கடுமைக்கு உட்பட்டு இருத்தலும், கீழ்த்திசை நாடுகள் இயற்கையின் செம்மைக்கு உட்பட்டு இருத்தலும் புலப்படும். ஆதலான் மேற்றிசை நாடுகளில் வாழ்ந்திருந்த மக்கள் தம் கடின வாழ்க்கையைச் செம்மை செய்துகொள்ள விரும்பி, பல துறைகளில் முயற்சிசெய்ய நேர்ந்தது. கீழ்த்திசை நாடுகளிலிருந்த மக்கள் மன நிறைவுடன் செவ்விய வாழ்க்கையில் தோய்ந்திருந்தமையால், பல வாறு முயன்று முன்னேற்றம் தேடும் முனைப்பு அற்றவர்களாய் இருந்தனர்.

மேனாட்டாரில் ஒரு பகுதியராகிய ஆங்கிலேயர்கள், தம் நாட்டைப் பலவகைப்பட்ட மானிட நலன்களைத் தரும் நாடாக்க விரும்பி, கீழ்த்திசை நாடுகளுடன் வாணிபம் செய்யவும், அவற்றைத் தமக்குக் கீழ்படுத்தவும் முயன்ற முயற்சி ஆசியா கண்டத்தில் பரவியதுபோல, ஆப்பிரிக்கா கண்டத்திலும் பரவலாயிற்று.

பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதி வரை-யில், ஐரோப்பிய மக்களுக்கு ஆப்பிரிக்கா கண்டத்தின் உள் பகுதிகளைப்பற்றி, யாதொன்றும் தெரியாமல் இருந்தது. அதன் பின்னரே அந்நாட்டில் பொன்னும் பல சிறந்த பொருள்களும் எளிதில் கிடைக்கின்-றன என்ற உண்மை அவர்களுக்குத் தெரிந்-தது. எனவே அவர்கள் ஆப்பிரிக்கா கண்டத்-துள் நுழைந்து வாணிபம் செய்யத் தக்க வழி-களையும் முறைகளையும் ஆராய்ந்தறிய முனைந்-தனர். ஆப்பிரிக்காவின் மெடிடரேனியன் கடலோரம் போர்ச்சுகீசியருக்கும் பிறநாட்-டவருக்கும் பதினாறும் நூற்றாண்டிலிருந்தே பழகிய இடமாயிருந்தது. ஆங்கிலேருயம் அக்-கடலோரத்தின் துறைமுகப்பட்டினங்களில் வந்து நீக்ரோ அடிமைகளை வாங்கிச் சென்று அடிமை வாணிபம் செய்துவந்தனர். எனினும் அக் கண்டத்தின் உள் பகுதிகளில் கிடைத்த வாணிப வாய்ப்புகளைப் பற்றிப் பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் தான் அவர்கள் அறிந்தனர்.

இந்தியப் பெருநாட்டுடன் வாணிபம் செய்-தற்குக் கிழக்கிந்திய வாணிபக் கழகத்தை ஏற்-

படுத்தியதுபோல், ஆப்பிரிக்காவுடன் தொடர்பு கொள்ள, **ஆப்பிரிக்கக் கழகம்** என்ற ஒன்று இங்கிலாந்தில் 1788-ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இக்கழகத்தார் முதல் முதலில் மேற்கு ஆப்பிரிக்காவுக்கு[1]**மேஜர் ஹூடன்** என்றவர் தலைமையில் ஒரு பிரயாணப் படையை அனுப்பினர். அப்படையினர் அனைவரும் குறிப்பிடத்தக்க யாதொரு பயனும் காணுமல், பல பெரும் இன்னல்களுக்கு உள்ளாய், இறந்தனர். அதன் பின்னர், ஆப்பிரிக்காவுக்குச் சென்று பாடுபட, எவரும் மன வன்மையுடன் முன் வரவில்லை. அத்தருவாயில் தான் **மங்கோ பார்க்** ஆப்பிரிக்கக் கழகத்தின் முயற்சியின் முளைபோல் வெளிப்பட்டார்.

**ம**ங்கோ பார்க் இங்கிலாந்தின் ஒரு பகுதியான [2]**ஸ்காட்லாந்தில்**, [3]**ஸெல்கிர்க்**நகரில்,1771-ஆம் ஆண்டில் பிறந்தார். அவர் மருத்துவத் தொழிலில், [4]**எடின்பர்க் பல்கலைக் கழகத்தில்** தேர்வு பெற்றவர். தம் இருபதாம் வயதில் அவர் இங்கிலாந்துக்கும் [5]**சுமத்ரா** தீவுக்கும் இடைச்செல்-

1. Major Houghton. 2. Scotland. 3. Selkirk
4. Edinburgh University. 5. Sumatra.

லும் [1]ஒர்ஸஸ்டர் என்ற நாவாயில் உதவி மருத்துவராய் அமர்ந்தார். அவ் வேலையில் இருந்தபோது தான் ஆப்பிரிக்கக் கழகத்தார் ஆப்பிரிக்காவுக்குஅனுப்பிய மேஜர்ஹாடனும் அவரைச் சேர்ந்த பிரயாணப் படையினரும் இறந்தனர். அவரைத் தொடர்ந்து அவ்வேலை-யில் ஈடுபடத்தக்க ஒருவரை ஆப்பிரிக்கக் கழகத்தினர் வேண்டுகின்றனர் என்பதை அறிந்து, மங்கோ பார்க், தாம் அந்த அருஞ்-செயலை மேற்கொள்ளத் துணிந்து, முன் வந்-தார்.

1795-ஆம் ஆண்டில், மே திங்களில், மங்கோ பார்க் இங்கிலாந்திலிருந்து புறப்பட்-டார். ஒரு திங்களில் அவர் [2]காம்பியா ஆற்றின் தோஃற்றுவாயிலுள்ள [3]ஜில்லிபிரீ என்ற சிறிய துறைமுகத்தைச் சேர்ந்தார். அங்கிருந்து அவ்-வாற்றின் வழியாகவே இருநூறு மைல்கள் சென்று, [4]பிஸானியா என்ற பட்டணத்தைச் சேர்ந்தார். ஆங்கு [5]டாக்டர் லெய்ட்லி என்ற ஆங்-கில மருத்துவரின் விருந்தினராய்ச் சிலகாலம் தங்கினர். அக்காலத்தில் அவர் பல உள்ளூர்

1. Worcester. 2. Gambia. 3. Jillifree.
4. Pisania. 5. Dr Laidly.

வணிகர்களைக் கண்டு, தமக்கு வேண்டிய வாணிப உண்மைகளை எல்லாம் தெரிந்து கொண்டார்.

ஆப்பிரிக்காவின் வட பகுதியில் [1]நைஜர் என்ற ஒரு பெரிய ஆறு பாய்கிற தென்றும், அதன் தோற்றத்தையும் முடிவையும் தெரிந்து கொண்டால், அதன் வழியாய்ச் சென்று ஆப்பிரிக்காவின் பல உட் பகுதிகளில் ஆங்கிலேயர் வாணிபத்தைப் புகுத்தக் கூடுமென்றும், அறிந்த பார்க், பிஸானியா நகரத்தில் தங்கியபடியே, நைஜர் ஆற்றுக்குச் செல்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினர். அன்றியும் ஆப்பிரிக்கா மொழிகளில் சிறந்த ஒன்றில், எளிதில் பேசக் கற்றுக் கொண்டார். பிறகு அவ்வாண்டு டிஸம்பர் திங்களில், தம் நீண்ட பிரயாணத்தை மேற்கொண்டார். பார்க் தம்முடன் இரண்டு நீக்ரோக்களை வழிகாட்டிகளாய் அழைத்துச் சென்றார். தாம் ஏறிச்செல்ல ஒரு பரியையும், தம் வேலையாட்களுக்கு இரண்டு கழுதைகளையும் அவர் வைத்திருந்தார்.

1. Niger.

இவ்வாறு புறப்பட்ட அவர் மூன்று நாட்கள் கழித்து, [1]மதீனு என்ற ஒரு சிறு பட்டணத்தைச் சென்று சேர்ந்தார். அப்பட்டணம் ஒரு சிறுமன்னனின் தலை நகராய் இருந்தது. அம் மன்னன் பார்க்கை மகிழ்ச்சியுடன் வரவேற்றுத் தன் நாட்டின் வழியாய்ச் செல்வதற்கு அனுமதி தந்து, சில உதவிகளும் செய்தான். அன்றியும் பார்க் மேற்கொண்ட வேலைக்கு ஏற்படக் கூடிய இடையூறுகளை எல்லாம் எடுத்துக் காட்டி, அவருக்கு யாதொரு இடையூறும் நேராதிருக்குமாறு, தன் குலத்தெய்வத்தைத் தொழுதான். அந்நாட்டைக் கடந்து பார்க் நீர் நிலைகள் அற்ற ஒரு நிலப்பகுதியைக் கடக்க நேர்ந்தது. அதையும் கடந்து, [2]பாண்டோ என்ற நாட்டின் தலை நகரான [3]படே கோண்டா என்ற நகரத்தைச் சேர்ந்து, அங்கு ஓர் உள்ளூர் வணிகன் விருந்தாளராய் இருந்தார். இருந்தபோது, அந்நாட்டு மன்னனின் கட்டளைப்படி அவனைச் சென்று கண்டார். அம் மன்னனே முன்னர் மேஜர் ஹாடன் என்றவரைக் கொள்ளையடித்தவன். அவனுக்குத்

1. Madina. 2. Bandow. 3. Fateh konda.

தம்முடைய குடையையும் மேற்சட்டையை-யும் பரிசிலாகத் தந்து, பார்க் சில உணவுப் பொருள்களையும், சிறிதளவு பொன்னையும் பெற்றுக்கொண்டு, மேற்சென்றார்.

[1]**செனிகால்** ஆற்றின் தென் கரையிலுள்ள ஒரு நாட்டைப் பார்க் சென்றடைந்தார். அந்நாட்டு மன்னன் தன் நாட்டுள் பிரயாணம் செய்வதற்கு வரியாய், பார்க்கிடம் இருந்த பொன்னை எடுத்துக்கொண்டு, மற்றும் சில பொருள்களையும் பெற்றுக் கொண்டான். பிறகு அந் நாட்டைக் கடந்து [2]**கஸ்ஸான்** என்ற நாட்டைச் சேர்ந்தார். கஸ்ஸான் மன்னனை [3]**டெய்ஸி** என்றவன் அவரைத் தக்கப்படி வர-வேற்று, விருந்தளித்தான். அவன் தன் நாட்டுக்கும் [4]**பம்பர்ரா** என்ற அடுத்த நாட்டுக்-கும் போர் நிலை விரைவில் நேரவிருந்தமை-யின், பார்க் தம் பிரயாணத்தை மேற்கொண்டு நடத்தல் அறிவுடைமையாகா தென்று கூறி-னன். ஆனல் பார்க் தம் பிரயாணத்தை நிறுத்-தாமல், வேறு வழியில் செல்லத் துணிந்து, அவ்வழியைக் கொண்ட[5] **லுடாமர்** என்ற [6]**மூர்**

1. Senegal. 2. Kassan. 3. Daisy. 4. Bambarra. 5. Ludamar. 6. Moor.

மக்களின் நாட்டின் தலைவனை [1]ஆலி என்றவனுக்கு ஆள் அனுப்பினர்.

ஆலி மன்னன் கொடிய உள்ளத்தனாய் இருந்தான்; அவன் வெள்ளையர்களை வெறுத்தான். கருப்பர்களாகிய தங்கள் நாட்டவர், வெள்ளையர் நாடுகளில் புகுந்து, பொருள் தேடவும் ஆட்சி செய்யவும் ஒரு சிறிதும் முயலாமலிருக்க, வெள்ளையர், கருப்பர் நாடுகளில் புகுந்து, வாணிபம் செய்யவும், கருப்பர்களை அடக்கி ஆளவும் முயலுதல் பெரும் அநீதி என்று ஆலி கருதினன். எனவே அவன் பார்க்கை ஆப்பிரிக்கா நாடுகளில் பிரயாணம் செய்ய விடக்கூடாது என்று தீர்மானித்து, அவரைச் சிறை செய்து வர, சில மூர் பரிவீரர்களை அனுப்பினன். அவர்கள் சமயம் அறிந்து பார்க்கைச் சிறை செய்து சென்றனர். ஆலி பார்க்கைப் [2]பினௌன் என்ற இடத்தில் சிறை செய்து வைத்தான். பார்க் அச்சிறை வாசத்தில் பல துன்பங்களை அனுபவித்தார். கிறித்தவப் பகைவர்களான மூர் வகுப்பார் பார்க்கைப் பலவாறு துன்புறுத்தினர்.

1. Ali. 2. Benown.

பார்க் சிறையில் கிடந்த காலம் வேனில் காலமாய் இருந்தது. நாள் தோறும் வெப்பம் மிகுந்தமையால் ஒரு சிறு குடிலில் அடைக்கப்பட்டிருந்த பார்க் மிகத் துன்பப்பட்டார். இங்கிலாந்தின் குளிர்ச்சியில் பண்பட்ட அவர் உடல், இங்கு தாங்கரிய வெப்பத்தாலும், வரட்சிக் காற்றாலும், பெரிதும் மெலிந்தது. அன்றியும் குடிப்பதற்கு வேண்டிய அளவு தண்ணீர் கிடைக்கவில்லை. அவருடைய நீக்ரோ வேலையாள் கிணறுகளிலிருந்து நீர் முகந்துவரச் செய்த முயற்சிகளெல்லாம் வீண் ஆயின. மூர்மக்கள் அவனைத் தண்ணீர் எடுத்துச் செல்லாதபடி, துரத்தி அடித்தனர். தங்கள் சமய நெறிக்கு இடையூறு தேடும் கிறித்தவ நெறியினரை அம் மூர் மக்கள் அறவே வெறுத்தனர். கொடுந்தாகத்தால் நெஞ்சுலர்ந்த பார்க் ஒரு நாள் எருதுகள் நீர் அருந்தும் தொட்டியில் மிகுந்திருந்த நீரைக்குடிக்கவும் நேர்ந்தது.

மூர் மன்னனான ஆலி பார்க்கைச் சிறைப்படுத்தியதோடு நில்லாமல், அவரைக் கொல்லவும் விரும்பினான். அதை அறிந்த பார்க்

தப்பிச் செல்லும் வழியைத் தேடுவாராயினர். பகைவரால் சூழப்பட்டிருந்த அவர் தப்பிச் செல்வது அரிதாயிற்று. எனவே, அவர் எதற்கும் துணிந்து மனவன்மையுடன் இருந்தார். அவரைக் கொல்லக் கட்டளையிடுவதற்கு முன்னர், ஆலி அவரைத் தன் மனைவியான [1]**படீமா** என்றவளுக்குக் காட்ட விரும்பினன். படீமா ஒரு நாள் பார்க்கைச் சென்று கண்டாள். பெண்டிர்க்கேற்ற இரக்கம் நிறைந்த படீமா பார்க்கின் நிலைமையைக் கண்டு மனம் வருந்தி, அவரை விடுதலை செய்யுமாறு தன் கணவனுக்கு எடுத்துச் சொன்னள். அவள் பால் பெரு மதிப்பு கொண்டிருந்த ஆலி மன்னன் பார்க்கை விடுதலை செய்து அவருடைய உடைமைகளை எல்லாம் அவரிடம் சேர்ப்பித்தான்.

மூர் மன்னனுக்கும் மூர் மக்களுக்கும் மங்கோ பார்க்கினிடத்துச் சீற்றமும் வெறுப்பும் ஏற்பட்டதன் முன்னிலை ஈண்டு அறியத் தக்கது. சமய நெறிகள் பலவற்றில், மத மாற்றம் என்ற முறையைக் கையாண்டு, பல மதத்-

1. Fatima.

தவரைத் தம்பாற்படுத்த முயன்றவை மகம்மதிய நெறியும் கிறித்தவ நெறியுமே ஆம். அவற்றில் மகம்மதிய மதம் ஆப்பிரிக்காவில் முதலில் புகுந்து, பல கருப்பர் பிரிவுகளைத் தம்பால் ஈர்த்துக் கொண்டது. அவ்வாறு கொள்ளப் பட்டவர்களே மூர் மக்கள். மகம்மதிய நெறிக்குப் பிறகு, கிறித்தவ நெறி ஆப்பிரிக்காவில் புக முயன்றது. அம் முயற்சியே மூர் மக்களின் பகைக்கும் எதிர்ப்புக்கும் காரணமாய்ப் பார்க்கின் உயிருக்கும் உலையாய் நேர்ந்தது.

தாம் கொல்லப்படுவது உறுதி என்று எண்ணிய பார்க் விடுதலை பெற்றவுடன் மனம் மகிழ்ந்தாரேனும், தமக்கு நேர்ந்த இடுக்கண் பற்றியும், அது தவிர்க்கப்பட்டமை பற்றியும் கூர்ந்து கருதலாயினர். தாம் மும்முறை தற்கொலை செய்துகொள்ள முயன்றமை தட்டுண்டதைக் கண்டு க்ளைவ் அரும் பெருஞ்செயல், செய்ய ஊழ் தம்மை உயிருடன் விட்டிருக்கின்றது, என்று எண்ணியதுபோல், மங்கோபார்க்கும் தாம் உயிர் பிழைத்து, விடுதலை பெற்ற நிகழ்ச்சியை மேலும் அருஞ்செயல் செய்ய

ஊழ் தந்த வாய்ப்பெனவே கருதினர். எனவே அவர் உரம் குன்றாமல் தம் முயற்சியில் மேற்கொண்டு முனைந்தார்.

பின்னர் மழைக்காலம் வந்துற்றது. அங்கு தங்கியிருந்த மூர் மக்கள் வடக்கு நோக்கியும் தெற்கு நோக்கியும் பிரிந்து செல்லலாயினர். தென் திசையில் சென்ற மூர் பரிவீரர்களுடன், ஆலியின் உடன்பாட்டைப் பெற்று, பார்க் சென்றார். [1] **ஜர்ரா** என்ற இடத்தில் அவர் தங்கினர். அப்பொழுது அவரை மீண்டும் சிறை செய்யுமாறு ஆலி மன்னனல் அனுப்பப்பட்ட நால்வர் அங்கு வந்து சேர்ந்தனர். அது கண்ட பார்க் நள்ளிரவில் தப்பிச் சென்றார்.

அவ்வாறு சென்ற பார்க் பல இன்னல்களுக்கு ஆளாய் **பம்பர்ரா** நாட்டின் எல்லையைக் கடக்கலாயினர். ஒரு துணையுமின்றி, உணவுப்பொருள்களை வேண்டிய அளவு எடுத்துச் செல்லாமல், தம் பரியுடன் புறப்பட்டு, அவர் வழியில் கடும் பசியாலும், தாகத்தாலும் துன்பமடைய நேர்ந்தது. இரவுகளில் மக்கள் நடமாட்ட

1. Jarra.

மில்லாத, விலங்குகள் நிறைந்த கானகத்தில், அவர் பெரிதும் துன்பப்பட்டார். ஒரொரு கால் நீக்ரோ பெண்டிர் ஒரு சிலர் தந்த உணவையும் காட்டிய ஆதரவையும் தவிர, வேறு மகிழ்ச்சிதரும் நிகழ்ச்சி ஒன்றும் அப்பிரயாணத்தில் அவருக்குநேரவில்லை. [1] **ஸெகோ** என்ற நகரத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்த அவர் தற்செயலாய், சில நீக்ரோ பரிவீரர்களைச் சந்தித்து, அவர்களோடு மேற் செல்லலாயினர். அவர் ஏறிச்சென்ற பரிநீண்ட பிரயாணத்தால் களைப்புற்று, நீக்ரோக்களின் பரிகளுடன் தொடர்ந்து செல்ல முடியதாயிருந்தது. ஸெகோ நகரத்தின் அருகில் பார்க் சில அடிமைக்கூட்டங்களையும் அவர்களை அழைத்துச்சென்ற வணிகர்களையும் கண்டார்.

அக்காலத்தில் அடிமை வாணிபம் மேனாட்டில் பெரிதும் பரவியிருந்தது. இரக்கம் என்னும் மானிடப் பண்பை அடிப்படையாய்க் கொண்ட கிறித்தவ நெறியை மேற்கொண்ட மேனாட்டவர் அடிமை வாணிபத்தில் வெறுப்பு அற்றவர்களாய் இருந்தனர். இன்று பேச்சு

1. Sego.

உரிமையும், எழுத்து உரிமையும், ஆட்சி உரிமையும் எந்நாட்டு மக்களுக்கும் இன்றி யமையாமல் வேண்டுவன என்று கூறும் மேனாட்டாரின் முன்னோர்கள் ஆப்பிரிக்கா நாடுகளின்கருப்பர்களை அடிமைகளாய் விற்கவும் வாங்கவும் தயங்கினர் அல்லர். பார்க் பிறகு ஸெகோ பட்டினத்துக்குச் செல்லும் வழியில் நைஜர் பேராற்றைக் கண்டார். கண்டதும் அதன் கரைக்குச்சென்று வேட்கை தீரத் தண்ணீர் பருகினர். பின்னர் அவர் ஸெகோ பட்டினத்தைச் சென்று சேர்ந்தார். அப்பட்டினம் முப்பதினயிரம் குடிகளை உடையதாய், தாழ்ந்த கூரைவேய்ந்த மண்வீடுகளைக்கொண்டதாய், சில மூர் இனத்தாரின் கோவில்களைக் கொண்டதாய் இருந்தது. அந்நாட்டு மன்னனின் மாளிகை ஆற்றின் அக்கரையில் இருந்தது. பார்க் வந்த செய்தி மன்னன் செவிக்கு எட்டியது. அவன் தன் மதிப்பின் அறிகுறியாய்ப் பார்க்குக்கு ஐயாயிரம் சங்குக் காசுகளைப்பரிசிலாய்அனுப்பினன். அன்றியும், வெள்ளையர் ஆகிய பார்க் கருப்பரின் நாட்டின் உட்பகுதிகளுக்கும் பல இன்னல்களுக்கு

ஆளாய்வந்தமை, ஒரு தீயகருத்துடனும், என்று அவன் ஐயுற்றுப் பார்க்கை உடனே நாட்டை விட்டு அகலுமாறு கட்டளையிட்டான். பார்க் சிலநாள் அங்கு தங்கியிருந்து, பிறகு தம் பிரயாணத்தை மேற்கொண்டார். [1] **டிம்பக்டு** என்ற நகரம் ஆப்பிரிக்க வாணிபத்தின் நடுநாடி போன்றதெனவும், அது ஸேகோ நகரின் அருகில் உள்ளதெனவும், அறிந்த பார்க் அதனைச்சென்று சேர விரும்பினர். ஆனல் கடினமானநீண்டகாலப்பிரயாணத்தால், தக்க துணையின்றியும், வேண்டிய உணவின்றியும், பெரும் துன்பத்துக்கு ஆளான அவர் மேற்கொண்டுசெல்ல இயலாதவரானர். எனவே அவர் தம் தாய்நாட்டுக்குத் திரும்பினர்.

வழியில் [2] **கூலிகர்ரோ** என்ற ஊர் உப்பு வாணிபத்தில் சிறந்தது என்று கேள்விப்பட்டு, அங்கு சென்று சிலநாள் தங்கியிருந்தார். அங்கிருந்து கீழ்நோக்கிச்சென்ற அவர், ஒரு சிறு பட்டினத்தின் அருகில், கள்ளர் கூட்டத்தாரால் தாக்கப்பட்டார். அவர்கள் அவருடைய உடைமைகளையெல்லாம் பிடுங்கிக் கொண்டனர். தம்

1. Timbuctu. 2. Koolikurro.

உடைமைகளை இழந்ததற்கு அவர் வருந்தினர் அல்லர். எனினும், தம் பிரயாணத்தில், தாம் கண்ட வாணிப வகைப்பட்ட குறிப்புகளை எல்லாம் சேமித்து வைத்திருந்த தம் தலை உடையை அக்கள்வர்கள் கைப்பற்றியது அவருக்குப் பெரும் வருத்தம் தந்தது. ஆப்பிரிக்கக் கழகத்தாரின் நோக்கம் அக்குறிப்புகள் இல்லையானல் ஒரு சிறிதும் நிறைவேருதன்றே! தாம் எடுத்துக்கொண்ட முயற்சி அனைத்தும் வெறும்பாழ் ஆகுமென்று அவர் மனம் நொந்தார். நற்காலமாய் அக்கள்வர்கள் அவர் தலையுடையைக் கீழே எறிந்து விட்டுச் சென்றனர். அதைப் பெரும் மகிழ்ச்சியோடு எடுத்துக்கொண்டு பார்க் திரும்பினர்.

•[1] ஸிபிடூலூ என்ற நகரில் பார்க் சில காலம் தங்கினர். அந்நகரின் காவலன் பார்க்கிடமிருந்து கள்வர்கள் கொண்டு போன பொருள்களையெல்லாம் மீட்டுத் தந்தான். அதற்கு ஈடாகத் தம் பரியை அவருக்குப் பரிசிலாய் அளித்து விட்டுப் பார்க் மேற்சென்ருர். ஓர் ஒட்டகப் பிரயாணக் கூட்டத்தாரோடு கலந்து

1. Sibidooloo.

அவர் பிஸானியா நகரைச் சேர்ந்தார். அங்கு சிலநாள் தங்கி, தக்க மருத்துவம் செய்து கொண்டுக் கப்பலேறி, 1797 - ஆம் ஆண்டு, டிஸம்பர் திங்கள், 22-ஆம் நாள் இங்கிலாந்தைச் சேர்ந்தார்.

இங்கில உலகில், சரித்திர காலத்தின் வரம்புக்குள், அரிய பிரயாணங்களை மேற்கொண்ட சிலருள் மங்கோபார்க் முதலிடத்தில் வைத்து எண்ணத்தக்கவர். எப்படிப்பட்ட இடையூறுகளுக்கும் இன்னல்களுக்கும் அஞ்சாமல், அவைகளை அரிய விருந்துபோல் ஏற்றுக் கொண்டு, பிரயாணம் செய்ய விரும்புதல் சிற்சில மக்களின் இயல்பு. அத்தகைய இயல்பால் மங்கோபார்க் ஆப்பிரிக்காப் பிரயாணத்தை மேற்கொண்டார் அல்லர். தம் நாட்டவர் உலகப்பெருநாடுகளுடன் வாணிபம்செய்து அவ்வாணிபத்தால் அரசியல் வகைகளிலும் பிறவகைகளிலும் சிறக்கவேண்டும் என்ற ஒரு அரியவேட்கையினுல் உந்தப்பட்டே அவர் இப்பிரயாணத்தை மேற்கொண்டார். அவருடைய மனத்திட்பம் எந்நாட்டவர்க்கும், எக்காலத்தும் ஒரு வழிகாட்டியாய் நிற்கு மென்பதில் ஐய-

யில்லை. இங்கிலாந்தில் நிறுவப்பட்ட ஆப்பிரிக்கக் கழகத்தின் சார்பாய் உயிரை உண்மையில் துரும்பென மதித்துப் பார்க் செய்த அருஞ்செயல் பெரிதே.

மங்கோ பார்க் தம் பிரயாணத்தில் இரண்டு உண்மைகளை அறிந்தார். மானிடனுடைய நிறம் அவனுடைய ஏற்றத்துக்கேனும் தாழ்வுக்கேனும் உற்ற காரணமாய் இருந்ததையும், மேனாட்டாரின் உள்ளத்தில் தோன்றிய செல்வம் தேடும் ஆர்வம் அவர்களுடைய சமய நெறியின் அறிவுறுத்தல்களால் திருந்தவில்லை என்பதையும் அவர் அறிந்தார்.

வீடு சேர்ந்த பார்க் சில காலம் தம் மருத்துவத்தொழிலை மேற்கொண்டிருந்தார். ஆயினும் அவர் மனம் தொழிலின் மேல் நிலையாய் நிற்கவில்லை. நைஜர் ஆறு அவர் மனக் கண்ணை விட்டு அகலவில்லை. அவ்வாற்றின் தோற்றத்தையும், அது பாயும் வழிகளையும், அதன் முடிவையும் நன்கு தெரிந்து கொண்டாலொழிய, ஆங்கில வாணிபம் ஆப்பிரிக்காவில் நிலை கொள்ளாது என்ற உண்மை அவரை மீண்டும் இரண்டாம் பிரயாணம் செய்யத் தூண்டி-

யது. 1805-ஆம்ஆண்டில் ஆப்பிரிக்கக் கழகத்தார் அவரை மறுபடியும் ஆப்பிரிக்காவுக்கு அனுப்பினார்கள். இம்முறை அவர்கள் ஆப்பிரிக்காவில் விற்கத் தக்க பொருள்களைப் பார்க்கிடம் கொடுத்தனுப்பினார்கள். தம் முதல் பிரயாணத்தில் கண்டறிந்த வாணிப அனுபவங்களைப் பயன் படுத்தி, இவ்விரண்டாம் பிரயாணத்தில் ஆங்கில வாணிபத்துக்கு ஆப்பிரிக்க வழியை வகுத்து வைக்க பார்க் எண்ணினார். எனவே அவர் மகிழ்ச்சியுடன் மீண்டும் புறப்பட்டுக், காம்பியா ஆற்றின் கரையைச் சேர்ந்தார். அங்கு அவர் ஒரு பிரயாணப் படையைச் சேர்த்துக் கொண்டார். அப்படையில் பல ஆங்கிலப் போர் வீரர்களும் வழிகாட்டிகளும் இருந்தனர். பிரயாணம் தொடங்கிய காலம் அடர்ந்த மழை பெய்யும் காலமாயிருந்தது. அம்மழையினால் கடுஞ்சுரம் ஒன்று பிரயாணப் படையினர் பலருக்கு ஏற்படவே, பலர் இறந்தனர். மிகுந்த சிலருடன் பார்க் **டிம்பக்டு** என்ற பட்டணத்தைக் கடந்து, ஆயிரம் மைல்கள் தூரம் நைஜர் ஆற்றின் வழியாய்ச் சென்றார். அவ்வாற்றின் தோற்றுவாய்க்கு இன்-

னும் எண்ணூறு மைல்கள் இருந்தன. [1]பௌஸா என்ற இடத்தில் பார்க்கும் பிறரும் உள்ளூர் மக்களால் கொல்லப்பட்டனர். இவ்வாறு தம் உயிரைத் தந்து மங்கோபார்க் ஆங்கிலேயரின் வாணிபத்தின் விரிவுக்கும், அவர்களுடைய பரந்த ஆட்சிக்கும் ஆப்பிரிக்காவில் கடைக் கால் பதித்தார்.

---

1. Bowsa.

## * ஸர் ஸ்டாம்பர்ட் ராபில்ஸ்

ஒருவனுடைய வாழ்க்கையை நன்கு ஆராய்ந்து பார்க்குமிடத்து, அதில் மூன்று பாகுபாடுகள் இருத்தல் தெற்றெனவிளங்கும். அவை அறிவு, விருப்பம், செய்கை என்பன. இந்த மூன்று அடுக்குகளைக் கொண்ட அடிப்படையின் மேல் ஒருவனுடைய வாழ்க்கை என்னும் கட்டடம் நிற்கின்றது. இவை மூன்றும் ஒன்றற்கொன்று இயைபுடையன. அறிவின் தோற்றம் வளர்ந்து விருப்பத்தின் தோற்றத்துக்கு வழி செய்கின்றது; விருப்பத்தின் தோற்றம்வளர்ந்து, செய்கையின் தொடக்கத்துக்கு வழி செய்கின்றது; செய்கையின் தொடக்கம் வளர்ந்து வாழ்க்கை என்னும் பயனைப் முடிகின்றது.

தனிமகனுடைய வாழ்க்கை சிற்சில இயைபுகளாலும் தொடர்புகளாலும், உருப்பெற்றுக் குடும்ப வாழ்க்கையாய் அரும்புகின்றது. குடும்ப வாழ்க்கை பலவகைப்பட்ட

* Sir Stamford Raffles.

நேர்புகளாலும் வாய்ப்புகளாலும் கட்டுப்பாடு-களாலும் பெருமையடைந்து, நாட்டு வாழ்க்கை-யாய் மலர்கின்றது. இந் நாட்டு வாழ்க்கை பல வகைப்படும். நாடுகளின் இயற்கை அமைப்புக்கும், அவை தோன்றி வளர்ந்த வகைகளுக்கும் ஏற்பப், பற்பல நாட்டவரின் வாழ்க்கை உரு வெய்தும். கூர்ந்து நோக்கு-வார்க்கு ஒவ்வொரு நாட்டவரின் வாழ்க்கையும் ஒவ்வொரு குறிக்கோளை அடிப்படையாய்க் கொண்டிருத்தல் புலப்படும்.

சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் முளைத்த ஆங்கில வாழ்க்கை ஆங்கில நாட்டின் சிறுமை யால் விளக்கமற்றிருந்தது.

> **நாடென்ப நாடா வளத்தன; நாடல்ல**
> **நாட வளம் தரும் நாடு.**

என்ற குறளின்படி, ஒரு நாடு தன் செவ்விய வாழ்க்கைக்குப் பிற நாடுகளின் வளங்களை எதிர்பாராமல் இருத்தல் வேண்டும், என்பது புலனாகின்றது. வள்ளுவர் வகுத்த தக்க இலக்கணத்திற்கு இலக்கியம் ஆகாத நிலையில் ஆங்கில நாடு அக் காலத்தில் இருந்தது. எனவே ஆங்கில மக்களின் முயற்சி வளம்

குறைந்த தங்கள் சிறு நாட்டை வளங்கள் பல நிறைந்த பெரு நாடாக்க முனைந்தது. அம் முனைப்பின் முற்படையில் விளங்கிய சிலருள் ஒருவர் **ஸர் தாமஸ் ஸ்டாம்பர்ட் ராபில்ஸ்.** ராபில்ஸ் [1]**ஜமைக்கா** நகரின் அருகில், கடலோரத்தில், ஒரு வணிகக் கப்பலில், 1781-ஆம் ஆண்டு, ஜூலைத் திங்கள், ஆறும் நாளில் பிறந்தார். அவருடைய இளமை இலண்டன் நகரில் கழிந்தது. அவர் தம் பதினாறும் ஆண்டில் இலண்டன் பட்டி-னத்தில் இருந்த கிழக்கிந்தியவாணிபக் கழ-கத்தின் தலைமைத் தொழிலகத்தில் கணக்க-ராய் அமர்ந்தார். **செய்வன திருந்தச் செய்** என்ற அறிவுரையில் நம்பிக்கை வைத்த அவர் தம் வேலையை முழுமனதுடன் திறமையாய்ச் செய்து வந்தார். **முயற்சி தன் மெய்வருத்தக் கூலி தரும்** என்றபடி, அவருடைய முயற்சியால் மனம் கனிந்த கழகமுதல்வர்கள் 1800-ஆம் ஆண்டில், ஆண்டொன்றுக்கு நூறு பௌன் வருவாயுள்ள, மேல் வேலையில் அமர்த்தினர். அவ்வேலையை ராபில்ஸ் ஊக்கமாய்ச் செய்து வந்தார். எனவே, 1805-ஆம் ஆண்டில்

1. Jamaica.

அவரைப் [1]**பினங்கு** நகரின் ஆளருக்குச் செயலாளராய், ஆண்டொன்றுக்கு 1500 பௌன் தந்து அமர்த்தினர்.

**பினங்கு** என்பது மலேயா நாட்டின் ஒரு தீவின் வாணிபத் துறைமுகப்பட்டினம். அதைக் கிழக்கிந்திய வாணிபக் கழகத்தார் மலாய் மன்னனிடமிருந்து ஒரு ஏற்பாட்டின்படி பெற்றனர். இங்கு ராபில்ஸ் இடைவிடாமல் உழைத்து வாணிபக் கழகத்தின் ஆக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் ஏற்றவாறு, தம் வேலையைச் செய்து வந்தனர். ராபில்ஸ் தம் பால் பிறர் வெறுப்பு கொள்ளாதவாறு நடந்து கொள்ளும் இயல்புடையவர். அவருடைய உள்ளத்தில் எப்பொழுதும் அருஞ் செயல் செய்யும் எண்ணமே குடிகொண்டிருந்தது. அவருடைய நற்பண்புகளைப் பற்றி இந்தியாவின் ஆங்கில ஆட்சித் தலைவராயிருந்த [2]**லார்ட் மிண்டோ** கேள்விப்பட்டார். அவர் வாய்ப்பறிந்து, ராபில்ஸைத் தம் மருகில் பொறுப்புற்ற வேலையில் வைத்துக் கொள்ளக் கருதினர். ஆங்கிலேயருக்கும் பிரான்ஸ் நாட்டவருக்கும்

1. Penang. 2. Lord Minto.

அடிக்கடி தோன்றியும் மறைந்தும், குறைந்தும் பெருகியும் இருந்த பகை, பிரான்ஸ் நாட்டுப் பெருமன்னரான [1]**நெபோலியன்** காலத்தில் மிகவும் உயர்ந்தது. நெபோலியனுடைய ஆவல் நெஞ்சம் இந்திய மண்மேல் தாவத் தொடங்கிற்று. இந்திய நாட்டைச் சுற்றி இருந்த **ஸிலோன், ஸுமத்ரா, ஜாவா,** [2]**போர்னியோ** என்ற டச் நாட்டவரின் தீவுகளைக் கைப்பற்றிக்கொண்டு இந்தியாவில் நுழைய நெபோலியன் ஒரு செய்வகையை வகுத்தார். 1810-ஆம் ஆண்டில் நெபோலியன் [3]**ஹாலண்ட்** நாட்டைத் தம் பெரு நாட்டுடன் அணைத்துக்கொண்டார். அதன் விளைவாய் டச் நாட்டவரின் தீவுகளெல்லாம் அவர் ஆட்சியின் எல்லைக்கு உட்பட்டன. உடனே அப் பெருமன்னர் தம் வலிய படையின் சில பிரிவுகளை இத்தீவுகளுக்கு அனுப்பி, இவ்விடங்களிலிருந்து, கடல் கடந்து, இந்திய எல்லைக்குள் நுழையக் கருதினர். அதை அறிந்த ஆங்கிலேயர்கள் அம்முயற்சியைத் தடுக்க லார்ட் மிண்டோவைத் தலைவராய் அமர்த்தி, ஒரு படையை

1. Napoleon 2. Borneo. 3. Holland.

**ஜாவா** தீவுக்கு அனுப்பினர். அந்த வாய்ப்பில் மிண்டோ ராபில்ஸைத் தம் செயலாளராய் வரவழைத்து அமர்த்திக் கொண்டார். பெரு முயற்சி இன்றியே, ஆங்கிலேயர்கள் ஜாவா-வைக் கைப்பற்றிக்கொண்டனர். பிறகு அத் தீவில் ராபில்ஸை மிண்டோவின் உதவி ஆளராய் அமர்த்தினர்.

ஜாவா தீவில் ராபில்ஸ் மிகத் திறமை-யாய் ஆள்வினை செய்து வந்தார். இந்தியாவில் கிழக்கிந்திய வாணிபக்கழகத்தாருக்கு ஏற்பட்ட வாணிப உரிமை ஆட்சிக் கடமையாய் மாறியது போல, ஜாவாவில் தொடக்கத்தில் மாறவில்லை. அங்கே ஆங்கிலேயரின் ஊக்கம் பெரும் வாணிப ஊக்கமாகவே இருந்தது. எனினும் ராபில்ஸ் ஜாவாவில், தம் நாட்டவரின் ஆட்சி ஏற்படவேண்டும் என்ற ஆர்வத்தினல், அத்-தகைய ஆட்சியின் நாட்டத்திற்கு வழிகோலும் முறையில், செய்யத்தக்க வினைகளையெல்லாம் செய்யத்தொடங்கினர். 1814-ஆம் ஆண்டில் தாம் தம்கீழ் அமர்த்திக்கொண்ட வினைஞர்-களின் திறமையைப்பற்றி எழுத நேர்ந்த

போது, அவர்கள் அனைவரையும் அவர் தக்க-படி புகழ்ந்து எழுதியிருக்கிறார்.

"சில ஆண்டுகளுக்கு முன்னர் ஜாவாவி-லிருந்த டச் நாட்டு வினைஞர்கள் தமக்குக் கிடைத்த வேலைகளைத் தமக்கெனப் பொருள் தேடிக்கொள்ளும் வாய்ப்புகளாய்க் கருதினர். ஆயின் யான் அமர்த்திய வினைஞர்கள் யாவரும் ஆங்கில நாட்டின் பெருமையையும் பண்பையும் மனத்துள் கொண்டுத் தன்னலம் விரும்பாமல் உழைத்திருக்கின்றனர். ஆறு-திங்களில் என் வினைஞர்கள் ஜாவாவில் செய்த வேலையின் அளவு டச்நாட்டு வினை-ஞர்களால் இரண்டு நூற்றாண்டுகளில் செய்-தற்கும் ஆகாது" என்று ராபில்ஸ் பெரு-மிதத்தோடு வரைந்திருக்கின்றார். ஜாவாவில் டச்நாட்டவர் கையாண்ட ஆட்சிமுறை மிகத் தாழ்ந்ததாய் இருந்தது. ஜாவா மக்களிடத்து அவர்கள் இரக்கமற்ற மனப்பான்மையோடும், தாராளமற்ற முறையிலும், அடக்கி ஆளும் வகையிலும் நடந்துகொண்டனர். அதனால் வெறுப்பும் எதிர்ப்பும் ஜாவா மக்களிடத்தில் தோன்றி வளரலாயின. ராபில்ஸ் ஜாவா மக்-

களின் உள்ளத்தில் வெறுப்பும் எதிர்ப்பும் வேரூன்றிவிடுமாயின், அந்நாட்டில் தம் நாட்டவர் கொண்ட கருத்து நிறைவேறாமல் ஒழியும் என்று அஞ்சி, அம்மக்களிடத்து உடனே மன நிறைவு ஏற்படும் வகையில் நடந்துகொள்ள வேண்டுமென்று கருதி, அதற்கேற்ற செய்வகையும் வகுத்து வைத்தார். ஆனால் வாணிபக் கழகத்தின் இயக்குநர்கள் செல்வம் ஈட்டுதலின் மேல் கண்ணுடையராய் இருந்தனரே யன்றி, ஆங்கில நாட்டின் எதிர்காலப் பெருமையை முன்னறிவுடன் அறிந்து, செயல் செய்யும் பான்மை உடையராய் இருந்தார் அல்லர். ஆதலால் அவர்கள் ராபில்ஸ் மேற் கொண்ட முற்போக்கு மனப்பான்மையை வெறுத்தனர்.

**உலகம் என்பது உயர்ந்தோர் மேற்றே** என்ற அறிவுரையின் உட்கருத்தை ஈண்டு அறிதல் வேண்டும். உலகத்தில் பல கோடி மக்கள் வாழ்கின்றனர். எனினும் அதன்கண் மானிட வாழ்க்கைக்கு ஆக்கமும் பெருமையும் இன்பமும் அளிப்பவர் உயர்ந்தோர் சிலரே ஆவர். அவ்வாறே உலகத்தின் பகுதியாகிய ஒரு நாட்-

டின் பெருமையும் அந்த நாட்டு மக்கள் அனைவராலும் தேடப்படுவது அன்றும். ஒரு நாட்டின் உயர்ந்தோர் ஒரு சிலரே அந்நாட்டின் ஆக்கத்திற்கு அடிப்படை ஆவர். இவ்வுண்மைக்கு ஆங்கில நாட்டின் பெருமையின் வரலாறு மாறுபட்டில்லை. ஒரு சில உயர்ந்த ஆங்கிலேயர்களின் முன்னறிவாலும், வீரத்தாலும், தீரத்தாலும், இழப்பாலும், ஊக்கத்தாலும் ஆங்கிலநாடு பெருமையுற்றது என்பது உண்மை. கிழக்கிந்திய வாணிபக் கழகத்தார் மேற்கொண்ட வாணிப முயற்சி **பிட்ச், ரோ, க்ளைவ், பார்க், ராபில்ஸ்** என்ற உயர்ந்தோர்களின் துணிவாலும், திறமையாலும், வீரத்தாலும், தீரத்தாலும், முன்னறிவாலும் ஆங்கிலேயரின் பெருநாட்டின் அடிப்படையாய் அமைந்தது. நெப்போலியப் பெருமன்னர் தாழ்வுற்ற பிறகு ஹாலண்ட் நாடு தன் பழைய நிலைமையை அடைந்தது. அதன் உடைமைகளான தீவுகளில் ஸிலோனைத் தவிர்த்து, மற்றவற்றை ஹாலண்ட் நாட்டுக்கே ஆங்கிலேயர்கள் திருப்பித்தந்தனர். அதனால் ஜாவாவில் ராபில்ஸ் மேற்கொண்ட வினை முடியாமல்

நின்றது. ராபில்ஸ் ஓய்வு எடுத்துக்கொண்டு இங்கிலாந்துக்குச் சென்றார்.

இங்கிலாந்தில் ராபில்ஸ் வாணிபக் கழகத்தாரின் பாராட்டைப் பெறவில்லை. ஆயினும் ஆங்கில அறிஞர் உலகம் அவர் ஜாவாவில் இருந்த காலத்து மேற்கொண்டிருந்த கலைப் பயிற்சியைப் பாராட்டிப் புகழ்ந்தது. அதன் பயனாய் அவருக்கு இளவரசர் ஒரு பெரும் விருந்தளித்தார். அவ்விருந்தில் ராபில்ஸ் ஜாவாவில் ஆற்றிய தொண்டு நன்கு பாராட்டப்பட்டது. அரசக் கண்காணிப்புக்கு ஆளான பிறகு ராபில்ஸைக் கிழக்கிந்திய வாணிபக் கழகத்தார் தக்கவாறு கருதலாயினர். 1818-ஆம் ஆண்டில் சுமத்ராவின் அருகிலுள்ள [1]பென் கூலன் என்ற இடத்திற்கு உதவி ஆளராய் ராபில்ஸ் அனுப்பப்பட்டார்.

சுமத்ரா டச்மக்களின் ஆளுகையில் இருந்தது. அதன் தென்முனையே ஆங்கிலேயரின் உடைமை. மற்ற பெரும் பாகம் பல பிரிவுகளாய்ச், சிறுசிறு மகம்மதிய மன்னர்களால் ஆளப்பட்டது. பென்கூலன் பட்டினத்தில் தங்கிய ராபில்ஸ் சுமத்ரா அடங்கலையும் ஆங்-

1. Bencoolen.

கில ஆளுகைக்குள் கொண்டு வர விரும்பினர். ஒரு சிறு வாணிப நகராய் இருந்த பென் கூலன் பட்டினத்தை அவர் சுமத்ராவின் தலை நகராய்ச் செய்ய விரும்பினர். தம்மை மகம்மதிய மன்னர்கள் அனைவரும் தலைவராய் ஏற்றுக் கொள்ளுமாறு செய்து, ஆங்கிலப் பெரு நாட்டின் எல்லையைப் பெரிதாக்க அவர் கருதினர். ஜாவாவில் தம்மைச் சிறுமை படுத்திய ராபில்ஸ் சுமத்ராவிலும் அத்தகைய முயற்சியில் ஈடுபடுவார் என்று எதிர்பார்த்த டச் நாட்டவர் சுமத்ராவில் தம் வன்மையைப் பெரிதாக்கிக் கொள்ள பல வகையிலும் முயன்றார்கள். அம்முயற்சியின் பயனாய் ஆங் கில வாணிபத்திற்குக் குறைவு ஏற்பட்டது. கிழக்கிந்திய வாணிபக் கழகத்தின் இயக்குநர்கள் ராபில்ஸின் கருத்தை வெறுத்தனர். அவர் அத்தகைய முயற்சிகளில் ஈடுபடுதல் கூடாது எனவும் ஒரு கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

அக்கட்டளை ராபில்ஸின் குன்றா ஊக்கத்தைக் குறைக்க வில்லை. அவர் இந்தியாவில்

ஆட்சித் தலைவராய் இருந்த [1]லார்ட் ஹேஸ்டிங்ஸ் என்றவருக்குத் தம் கருத்தைத் தெரிவித்தார். ஹேஸ்டிங்ஸ் விரிந்த மனப்பான்மை உடையராய் இருந்தமையின், ராபில்ஸின் கருத்து அவருக்கு ஏற்றதெனப் புலப்பட்டது. 1818 ஆம் ஆண்டில் ராபில்ஸ் ஹேஸ்டிங்ஸால் கல்கத்தா நகருக்கு அழைக்கப் பட்டார்.

கல்கத்தாவைச் சென்று சேர்ந்த ராபில்ஸ் ஹேஸ்டிங்ஸுடன் கலந்து பேசித்தம்கருத்தை முடித்தற் கேற்ற ஒரு வழியைக் கண்டு பிடித்தனர். மலேயா நாட்டின் முனையிலுள்ள ஒரு சிறு தீவு தம் கைவசமாயின் அதை நடு இடமாய்க் கொண்டு, [2]மலாக்கா, [3]சைனு, ஆகிய நாடுகளுடன் எளிதில் வாணிபம் செய்ய இயலும் என்று ராபில்ஸ் கருதினர். அந்தத் தீவில், முற்காலத்தில் [4]சிங்கபுரி என்ற பட்டினம் நிலவியிருந்தது. அது [5]ஜோஹோர் சுல்தானுடைய ஆளுகையில் இருந்தது. ராபில்ஸ் ஹேஸ்டிங்ஸின் உடன் பாட்டையும் உதவியையும் பெற்று, ஜோஹோர் மன்னனுடன் ஏற்

1. Lord Hastings- 2. Malacca. 3. China.
4. Singapore, 5. Johore.

பாடு செய்து, அத்தீவைப் பெற்ருர். 1819 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஆங்கிலக் கொடி சிங்க புரியில் பறந்தது. அதை அறிந்த டச் நாட்டவர் பெரும் சீற்றம் கொண்டனர். தங்கள் ஆட்சியின் எல்லைக்கு உட்பட்டிருந்த நாட்டின் நடுவிலிருந்த இத்தீவை அவர்கள் முன்னரே கைப் பற்ருமல் விட்டதற்கு வருந்தினர். அத்தீவில் ஆங்கிலவன்மை ஊன்றிவிட்டால், தங்கள் பரப்புக்கு நாளடைவில் இடையூறு ஏற்படுமென்று அவர்கள் தெரிந்து கொண்டார் கள். எனவே அத்தீவை எவ்வகையிலேனும் பெற அவர்கள் கருதினுர்கள். இந்த உண்மை களை எல்லாம் அறிந்த வாணிபக் கழகத்தார் ராபில்ஸ் மீது மிகச் சினம் கொண்டனர். தங் களுடைய உடன்பாடு இன்றியே சிங்கபுரியில் ஆங்கிலப் பொறுப்பை ஊன்றியது பெரும் தவறென அவர்கள் கருதினுர்கள். ராபில் ஸின் இச்செய்கை ஆங்கிலேயருக்கும் டச் நாட்டவருக்கும் போர் நிலையை உண்டாக்கும் காரணமாய் ஏற்பட்டது பற்றி அவர்கள் வருந் தினுர்கள். எனினும் லார்ட் ஹேஸ்டிங்ஸின் உடன்பாட்டைப்பெற்றே, ராபில்ஸ் இச்செய்-

கையை முடித்தமையால், ராபில்ஸை இத்தருவாயில் கண்டித்தால் ஹேஸ்டிங்ஸுக்கு வெறுப்பு ஏற்படக்கூடு மென்று கழகத்தார் எண்ணினர்கள். எனவே அவர்கள் சிங்கபுரி பற்றிய பொறுப்பை ஹேஸ்டிங்ஸ் தாமே ஏற்றுக்கொள்ள வேண்டு மென்று தீர்மானித்தனர்.

ராபில்ஸின் செய்கையால் ஏமாற்றமும் சீற்றமும் அடைந்த டச் நாட்டவர் நாளடைவில் மனம் வேறுபட்டு பென்கூலன் பட்டினத்தைப் பெற்றுக்கொண்டு, சிங்கபுரியை ஆங்கிலேயர் தம் உடைமையாக வைத்துக் கொள்ள உடன் பட்டனர். ஆங்கிலேயரின் கீழ்த்திசை வாணிபத்திற்கு வாயிலாய் விளங்கும் சிங்கபுரியைப் பெற்ற பெருமை ராபில்ஸுக்கே உரியதாகும். அவருடைய முன்னறிவும், அவர் ஹேஸ்டிங்ஸைத் தம் கருத்துக்கு உடன்படச் செய்தமையும், மிகப்பாராட்டுதற் குரியன. கடற் போரால் தீங்கு விளையாமல் இந்தியாவையும், ஆஸ்திரேலியாவையும் காத்துக் கொள்ளத்தக்க நடுவிடமாய் சிங்கபுரி அமைந்தது. சில ஆண்டுகளுக்குள்,

அது வளர்ச்சி பெற்றுச் சிறந்தது.. ராபில்ஸ் சில ஆண்டுகள் சிங்கபுரியில் தங்கியிருந்துப் பின்னர்த் தாய் நாட்டுக்குத் திரும்பினர். வழியில் அவர் ஏறிச் சென்ற கப்பல் தீக்கு இரையாய் விட்டது. அதனால் அவருடைய சேர்மானம் அனைத்தும் அழிந்தது. அவர் அக்கப்பலிலிருந்து தப்பிச் சென்றுத், தம் தாய் நாட்டைச் சேர்ந்தார். தம்முடைய நாற்பத்தைந்தாம் ஆண்டில் ஸர் ஸ்டாம்பர்ட் ராபில்ஸ் உயிர் துறந்தார்.

**ராபில்ஸ்** செய்த அருஞ்செயல் உண்மையில் பெரிதே. வெறும் பொருள் ஈட்டும் மனப்பான்மை நிறைந்த கிழக்கிந்திய வாணிபக்கழகத்தின் உதவி ஆளராய் அமர்ந்த அவர் முன்னறிவுடன் நாட்டுப்பற்றால் உந்தப்பட்டு, பொறுப் பனைத்தையும் தாமே ஏற்றுச், சிங்கபுரியை ஆங்கில உடைமையாய் ஏற்படுத்தியது புகழ்ச்சிக்குரிய செயலாகும்.

TAMIL NADU ARCHIVES LIBRARY
EGMORE, MADRAS-600 008
104934



44686